www.nunnarivu.com

நீதியின் நுண்ணறிவு புலனாய்வு இதழ்


# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

மலர் : 6 | இதழ் : 7 | ஏப்ரல் : 2026 | தமிழ் மாத இதழ் | விலை : ரூ.15/-

Volume : 6 | Issue : 7 | April : 2026 | Tamil Monthly Mgazine | Price : Rs. 15/-



## எல்லா கணக்கும் தப்பா போகுதா? அதிர்ச்சியில் எடப்பாடி,விஜய்,



## தமிழக காவல் துறையின் கம்பீரம், சட்ட ஒழுங்கின் பாதுவாலர்



## டெல்லியை துறந்து டார்கெட் 2026! பின்னணியில் இருக்கும் பலமான ஸ்கெட்ச் இதுதானா?



## பேராவூரணியில் மீண்டும் தடம் பதிக்குமா தி.மு.க

# Z System Intelligent Controls Private Limited

system

Intelligence in Automation

We are prominent Industrial automation solution provider having strong knowledge and expertise in handling automation products like PLC, HMI/SCADA, VFD, PID controllers, Field transmitter, Switches, Sensors etc.

We areconversant in handling IOT, VR & AR applications

We offer complete sales, Engineering & Application development and Commissioning support services across India.

## Our Principles & Products

SIEMENS



PLC,HMI,Scada,VFD,IOT Solutions, RFID

azbil



Temperature Controller, Recorders, Switch, Sensors

TURCK



Sensors, Connectivity. Interface technology Analysers

AR, VR, ER Developement




## Our Service



Power



Water & Waste water



Metro



SPM



Cement



Metal



Smart World

## Our Clients

MELSS, KV, Rane, Subros, TATA, DDAL, SHS, MDC, sietec, ALSTRUT, INSIGHT, interface, MAHA, MXHUB, NIOT, Nein Automation, BGR ENERGY, OGY

## Contact Address

Plot No.36
27th Street
Thillai Ganga Nagar
Nanganallur
Chennai-600061
Website : www.zsystem.in

Plot No.22,23, [redacted]
Nagar, Tambaram
Chennai-
600045.Tamilnadu, India.
Phone : 098404 53136

/zsystem.in
/zsystem_in
/z-system-intelligent-controls-pvt-ltd

www.nunnarivu.com

# நீதியின் நுண்ணறிவு

NEETHIYIN NUNNARIVU

புலனாய்வு இதழ்

ஆசிரியர் வெளியீட்டாளர்
R.சிவக்குமார்

இணை ஆசிரியர்கள்
J.கணேசபாண்டி, A.விஜய்,
G.ஜெயபிரகாஷ்நாராயணன்

துணை ஆசிரியர்கள்
D.சிவராஜ், K.பாரதிராஜா, G.சுரேந்திரன்,
B.காந்திநாதன், S.ராஜ்நாராயணன்,

கௌரவ ஆலோசகர்கள்
A.கந்தசாமி. S.P.
காவல்துறை கண்காணிப்பாளர்(ஓய்வு)
சுபாஷ் சந்திரபோஸ்
காவல் துண கண்காணிப்பாளர் (ஓய்வு)
Dr.K.முருகேசன்.M.B.B.S., D.L.O.,
மா.செல்வராஜ்
(முன்னாள் முதல்வர் - குருநானக் கல்லூரி)
(மாநில தகவல் ஆணையர்)
சோம்புராஜன்
கூடுதல்ஆணையர் தெழிலாளர்துறை (ஓய்வு)
டாக்டர். மணிவண்ணன்.B.S.M.S.

முதன்மை நிருபர்கள்
M.சுப்பிரமணியன், R.சதீஷ்குமார்,
V.மாதவன்,

நிருபர்கள்
R.இன்பசேகரன், G.மோகன், S.சாம்எட்வின்,
C.சரவணன், S.சஞ்சய்குமார், A.மதிமாறன்,
J.ஜெஸ்டின்டேவிஸ், மு.ஐசக், P.சாலமன்,
P.கோகுல்நாதன், P.பிரம்மநாயகம்

சட்ட ஆலோசகர்கள்
R.வீரராகவன்.BSc., M.B.M., LL.B.,
K.M.S.செந்தில்குமார்.BSc., B.L.,
S.சரவணன்.M.Sc., B.L.,M.A.,

வடிவமைப்பு : மகாராஜா பிரிண்டர்ஸ்

நிர்வாக அலுவலகம்:
எண்.14/88, வெங்கடேஸ்வரா நகர்,
3வது மெயின் ரோடு,
வேளச்சேரி, சென்னை - 42.

nunnarivuidhal@gmail.com
www.nunnarivu.com

Allrights reserved legal jurisdiction in chennai city court only. Nothing in **NEETHIYIN NUNNARIVU** is intended to defame any person. But expressed in good faith pursuit of truth and public good.

## ஆசிரியர் பக்கம்

தமிழ் நாடு இந்தியாவின் அரசியல் வரலாற்றில் தனித்துவமான மாநிலமாக திகழ்கிறது. சமூக நீதி, மொழி பாதுகாப்பு, அடையாள அரசியல், மக்கள் நலத் திட்டங்கள் போன்ற பல்வேறு கொள்கைகள் இங்கு தேர்தல் அரசியலை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்களாக உள்ளன. துவக்க காலத்திலிருந்து இன்றளவும் தமிழக அரசியல் களத்தில் விழிப்புணர்வும், வாக்காளர்களின் அரசியல் அறிவும் மிக உயர்வாக உள்ளது.

தமிழக தேர்தல்களின் அடிப்படை வடிவமாகவே இருந்து வருகிறது. அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு முன் மக்களின் பிரச்சனைகளை நேரடியாக அணுகி, கல்வி, வேலைவாய்ப்பு, பெண்கள் நலம், விவசாயம், தொழில் வளர்ச்சி போன்ற விடயங்களில் வாக்குறுதிகளை முன்வைத்து தங்கள் பலத்தை வெளிக்காட்டுகின்றன.

தமிழகத்தின் தேர்தல் அரசியலில் சமூக அமைப்புகள், ஒன்றியங்கள், இளைஞர் மற்றும் பெண்கள் வாக்காளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். சமீபத்திய தேர்தல்களில் புதிய தலைமுறை அரசியல் கருத்துகளும், தொழில்நுட்ப வளர்ச்சியும் அரசியல் பிரசாரத்தை புதிய நிலைக்கு உயர்த்தியுள்ளது.

சமூக ஊடகங்கள், நேரடி மக்கள்ச் சந்திப்பு, இளைஞர் இயக்கங்கள் ஆகியவை தேர்தல் முடிவுகளில் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அதேசமயம், மக்கள் நலத் திட்டங்களும் தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் வெற்றிக்கு முக்கிய அடிப்படையாக உள்ளன. இலவச கல்வி, உரிமைச் சட்டங்கள், மருத்துவ சேவைகள், பெண்கள் சுயநிறைவு திட்டங்கள் போன்றவை வாக்காளர்களை நேரடியாக பாதிக்கும் காரணிகளாகத் திகழ்கின்றன. மொத்தத்தில், தமிழ் நாடு தேர்தல் என்பது வெறும் அரசியல் போட்டி அல்ல; அது சமூக விழிப்புணர்வு, மொழி பெருமை, சீர்திருத்தத் தேவை மற்றும் மக்கள் நலப் பார்வைகளை பிரதிபலிக்கும் ஜனநாயக விழாவாக உள்ளது.



ஆசிரியர்
R.சிவக்குமார்

# எல்லா கணக்கும் தப்பா போகுதா? அதிர்ச்சியில் எடப்பாடி,விஜய்,




**தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் திமுகவிற்கு வெற்றிவாய்ப்பு அதிகம் உள்ளதாக அடுத்தடுத்து கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன. இந்த கருத்து கணிப்புகள் தவெக விஜய் தரப்பிற்கு பெரிய அளவில் அதிர்ச்சியை கொடுத்துள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

தமிழக தேர்தல் களம் ; அடுத்தடுத்து வெளியாகி வரும் ‘சர்வே‘ குண்டுகளால் குறிப்பாக, வெளியிட்டிருக்கும் முடிவுகள், கோட்டை நோக்கிய பந்தயத்தில் தற்போதைய ஆளுங்கட்சியே ‘கிங்‘ என்பதை மீண்டும் ஒருமுறை அழுத்திச் சொல்லியிருக்கின்றன.

**திமுக வின் ‘மெகா‘ மெஜாரிட்டி!**

சிலரின் சர்வேயின் படி, திமுக கூட்டணி சுமார் 185 முதல் 195 வரை இடங்களை வாரிக் குவிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சென்னை மண்டலத்தில் 16-க்கு 16 என க்ளீன் ஸ்வீப் செய்ய வாய்ப்புள்ளதாக அந்தத் தரவுகள் சொல்கின்றன. மற்றொரு பக்கம், சர்வதேச பெட்டிங் தளமான பாலிமார்க்கெட், திமுக மீண்டும் ஆட்சி அமைக்க 78% வாய்ப்பு இருப்பதாகத் தெரிவிக்கிறது. கடந்த வாரத்தை விட இது 8 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சர்வே முடிவுகள் பனையூர் பக்கத்தில் பெரிய சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. அரசியலுக்கு வரும்போதே ’நாங்கதான் ஆல்டர்நேட்டிவ்’ என்று கெத்தாக வந்த விஜய்க்கு, இந்த 7% முதல் 10% வரையிலான வாக்கு வங்கி கணிப்புகள் கடும் அதிருப்தியைத் தந்திருப்பதாகத் தகவல். இதனால் அப்செட்டில் விஜய் இருப்பதாக கூறப்படுகிறது

தன்னுடைய ‘பிளாக்பஸ்டர்‘ இமேஜை வைத்து 2026-ல் ஒரு மேஜிக் நிகழ்த்தலாம் எனத் திட்டமிட்டிருந்த தளபதிக்கு, ’ஓட்டுகளைப் பிரிப்பார்; ஆனால் சீட்டுகளைப் பிடிக்க மாட்டார்’ என்கிற அரசியல் விமர்சகர்களின் கணிப்பு கசப்பான மருந்தாக அமைந்திருக்கிறது. குறிப்பாக, சென்னை பெரம்பூர் தொகுதியில் தான் நேரடியாகக் களம் இறங்கத் திட்டமிட்டிருந்த நிலையில், அங்கேயும் திமுக டீமின் கரம் ஓங்கி இருப்பதாக வரும் செய்திகள்



அவரை ரொம்பவே அப்செட் ஆக்கியுள்ளன. முக்கியமாக அங்கே சேகர் பாபு தீவிரமாக தேர்தல் பணிகளை செய்து கொண்டு இருக்கிறார். அவரை மீறி விஜய் வெற்றிபெற வாய்ப்பே இல்லை. அவரின் தேர்தல் பணிகளை முந்த வேண்டும் என்றால் விஜய் கடுமையாக களப்பணி செய்ய வேண்டும். ஆனால்





விஜய் இன்னும் களப்பணி செய்யாதது அவருக்கு எதிராக செல்லும் வாய்ப்புகள் உள்ளன.

**அடுத்த மூவ் என்ன?**

சர்வே முடிவுகளைப் பார்த்து சோர்ந்துவிடாமல், தனது ஐடி விங் மற்றும் பூத் கமிட்டி நிர்வாகிகளிடம் தளபதி ஆக்ரோஷமாக சில கேள்விகளை எழுப்பியிருக்கிறாராம். 'மக்களிடம் இன்னும் நாம் போக வேண்டிய தூரம் அதிகமா?' என்கிற ரீதியில் ஆலோசனைகள் பறக்கின்றன. 'ஹீரோ மென்டாலிட்டி'யை விட்டுவிட்டு, 'கிரவுண்ட் ஒர்க்'கில் இறங்க வேண்டும் என மூத்த நிர்வாகிகள் சில ஐடியாக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல அதிமுக பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர் எடப்பாடியும் இந்த சர்வே வால் சற்று அப் சட்டில் இருப்பதாக சொல்லப்படுகிறது இந்த 'டேட்டா' யுத்தத்தில் ஸ்டாலின் சிரிப்பாரா? எடப்பாடி முழிப்பாரா?விஜய் அழுவாரா? என்பதைப் பார்க்க மே 4 வரை காத்திருப்போம்! இந்த சர்வே முடிவுகளுக்கு எதிராக எடப்பாடி, விஜய் எடுக்கப்போகும் 'மாஸ்டர் பிளான்' என்ன? தேர்தல் களத்தில் அவர் என்ன மாதிரியான மாற்றங்களை செய்வார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.





# தமிழக காவல் துறையின் கம்பீரம், சட்ட ஒழுங்கின் பாதுவாலர்

தமிழகக் காவல்துறையின் கம்பீரக் குரலாகவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் சளைக்காத நிபுணராகவும் திகழும் முனைவர் சந்திப் ராய் ரத்தோர் (Dr.Sandeep Rai Rathore IPS)

தற்போது தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு தலைமை இயக்குநராக (DGP-Law and Order) நியமிக்கப்பட்டுள்ளார். 1992-ஆம் ஆண்டு ஐ.பி.எஸ் பிரிவைச் சேர்ந்த சந்திப் ராய் ரத்தோர், டெல்லியைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களாகத் தமிழகத்தையே தனது கர்மபூமியாகக் கொண்டு மக்கள் பணியாற்றி வருகிறார். சென்னை மாநகரின் 109-வது காவல் ஆணையராக இவர் ஆற்றிய பணிகள், இன்றும் காவல்துறை வட்டாரத்தில் முன்மாதிரியாகப் பேசப்படுகின்றன.

இவரது பணி அனுபவம் வெறும் சட்டம்-ஒழுங்குடன் மட்டும் நின்றுவிடவில்லை. மத்திய அரசின் தேசியப் பேரிடர் மீட்புப் படை (ஹிம்பூய்) மற்றும் மத்திய தொழில் பாதுகாப்புப் படை (CISF) ஆகியவற்றில் பணியாற்றியபோது, இக்கட்டான சூழல்களை எப்படிக் கையாள்வது என்பதில் உலகத்தரம் வாய்ந்த நிபுணத்துவத்தைப் பெற்றார்.

ஒரு காவல்துறை அதிகாரியின் வெற்றி என்பது அவர் கையாண்ட வழக்குகளிலும், மக்களிடம் பெற்ற நம்பிக்கையிலும்தான் இருக்கிறது. அந்த வகையில் ரத்தோரின் சாதனைகள் மலைக்க வைப்பவை.

1998-ல் கோவை குண்டுவெடிப்பு சம்பவத்திற்குப் பிறகு, அங்கு அமைதியை நிலைநாட்டுவதிலும் குற்றவாளிகளைக் கண்டறிவதிலும் இவர் காட்டிய வேகம் மிக முக்கியமானது. சி.பி.சி.ஐ.டி பிரிவில் இருந்தபோது, தேசத்தையே உலுக்கிய தெல்கி முத்திரைத்தாள் மோசடி வழக்கைத் திறம்படக் கையாண்டார். புதிதாக உருவாக்கப்பட்ட ஆவடி காவல் ஆணையரகத்தின் முதல் ஆணையராகப் பொறுப்பேற்று, ஒரு புதிய நிர்வாகக் கட்டமைப்பை அடிமட்டத்திலிருந்து செதுக்கிய பெருமை இவரைச் சாரும்.

வேலூர் வி.ஐ.டி (VIT) பல்கலைக்கழகத்தில் ‘பேரிடர் மேலாண்மை‘ குறித்த தனது ஆய்விற்காக

முனைவர் (**Doctorate**) பட்டம் பெற்றார். ஒரு உயர்மட்ட அதிகாரி, இத்தனை பணிகளுக்கு மத்தியிலும் கல்வி மீது காட்டும் ஆர்வம் வியக்கத்தக்கது.

சந்திப் ராய் ரத்தோர் அவர்களின் வேலை செய்யும் முறை மிகவும் தனித்துவமானது. **Comman Spee, Spirit** என்பதே இவரது தாரக மந்திரம். ஆவடியில் இவர் நடத்திய 'போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு' விழிப்புணர்வு மாரத்தான் மற்றும் ட்ரையத்லான் போட்டிகள் இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

கடுமையான அதிகாரியாகத் தெரிந்தாலும், மனிதாபிமானப் பணிகளில் இவர் காட்டும் ஆர்வம் அலாதியானது. விளையாட்டுப் போட்டிகள் மூலம் திரட்டப்பட்ட நிதியை சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கிய இவரது செயல், சீருடைக்கு பின்னால் இருக்கும் ஈரமான இதயத்தைக் காட்டியது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் இவரைத் தமிழகத்தின் புதிய டி.ஜி.பி-யாக (**DGP/Head of Police Force**) நியமித்துள்ளது. தேர்தல் நேரத்தில் ஒரு மாநிலத்தின் அமைதியைப் பாதுகாப்பது என்பது கத்தியின் மேல் நடப்பது போன்றது. ஆனால், அனுபவம் வாய்ந்த ரத்தோர் அவர்களின் கைகளில் தமிழகக் காவல்துறை ஒப்படைக்கப்பட்டிருப்பது பொதுமக்களிடையே ஒரு பாதுகாப்பான உணர்வைத் தந்துள்ளது.

தமிழகக் காவல்துறை அகாதெமியின் இயக்குநராகப் பணியாற்றி, இளம் அதிகாரிகளைச் செதுக்கிய இவர், இப்போது ஒட்டுமொத்தப் படையையும் வழிநடத்தத் தயாராகிவிட்டார். நடுநிலையான நிர்வாகம், குற்றவாளிகளுக்கு நடுக்கம், சாமானிய மக்களுக்குப் பாதுகாப்பு - இதுவே இவரது தற்போதைய பயணத்தின் இலக்காக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்ட சந்திப் ராய் ரத்தோர் அவர்கள், தனது புதிய பொறுப்பில் மென்மேலும் பல சாதனைகளைப் படைக்க நீதியின் நுண்ணறிவு பத்திரிமையின் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

---

2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலில், விசிக சார்பில் போட்டியிட எமக்கு மீண்டும் வாய்ப்பு அமையவில்லை என்பதை வைத்து வலைதளங்களில் பல்வேறு கருத்துக்களில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிகிறேன். இதில் என் மேல் அன்பு கொண்டு எனக்கு ஆதரவாக கருத்துப் பரிமாறிய அனைத்துத் தோழர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன். அதே நேரத்தில், ஒரு கட்சியில் யாருக்கு எப்போது எப்படி வாய்ப்பளிக்க வேண்டும் என்பது அந்தக் கட்சியின் தலைமை எடுக்கும் முடிவாகும். அம்முடிவு எதுவாயினும் அதை ஏற்றுக் கொள்வதே சிறந்த அறமாகும். அந்த வகையில், 2026 சட்டமன்றத் தேர்தலில் தலைவர் எழுச்சித் தமிழர் உள்ளிட்ட 8வேட்பாளர்களும் வெற்றி பெற்று சட்டப்பேரவையில் விசிகவின் குரல் வலுவாக ஒலிப்பதற்கும், நமது கூட்டணி சார்பில் களம் காணும் அனைவரும் வெல்வதற்கும், திமுக தலைமையிலான நல்லாட்சி மீண்டும் அமைவதற்கும் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம். எனது பொது வாழ்க்கையில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றியதை விட, இன்னும் வீரியத்துடன் தொடர்ந்து அரசியல்





மேற்கு மண்டல காவல்துறை ஐ.ஜியாக ரம்யா பாரதியை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவு. மேற்கு மண்டல ஐஜியாக பணியாற்றி வந்த சரவணசுந்தர்.IPS. மாற்றம்.மேற்கு மாவட்டம் என்பது கோயமுத்தூர் திருப்பூர் நீலகிரி சேலம் ஈரோடு நாமக்கல் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் காவல்துறை சட்டம் ஒழுங்கைநிர்வகித்தல் பணியாகும்.

---



## தஞ்சை மண்ணிற்குப் பெருமை சேர்த்த காவல் ஆய்வாளர்! மேலும் அவர் பணிசிறக்க நீதியின் நுண்ணறிவு பத்திரிகையின் சார்பாக வாழ்த்துகள்

தஞ்சாவூர் மாவட்டம் துலுக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த காவல் ஆய்வாளர் திரு. கே. சிவக்குமார் அவர்கள், குருகிராமில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான காவல் துறை துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்! சாதனை விவரம்: விஜபி பாதுகாப்பிற்குப் பயன்படும் MP-5 துப்பாக்கி சுடுதல் பிரிவில் முதலிடம் பிடித்து தமிழக காவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரது இந்த மகத்தான வெற்றியைப் பாராட்டி மத்திய காவல் துறை தலைவர் திரு. ஜி. பி. சிங் அவர்களும், பொதுமக்களும் வாழ்த்துகளைக் குவித்து வருகின்றனர்.

# தென்காசியின் பாதுகாப்பு அரண் மயில்வாகனன் ஐ.பி.எஸ்.



**இயற்கை எழில் கொஞ்சும் தென்காசி மாவட்டத்தின் புதிய காவல் கண்காணிப்பாளராக திரு. அ.மயில்வாகனன்.ஐ.பி.எஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ளார்.**

தமிழக மக்களிடையே, குறிப்பாக இளைஞர்களிடையே மிகவும் பிரபலமான அதிகாரிகளில் இவரும் ஒருவர்.மக்களின் அன்பைப் பெற்ற அதிகாரியான மயில்வாகனன் அவர்கள், கல்வியிலும் விளையாட்டிலும் சமமான ஆர்வம் கொண்டவர். இவர் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களை முடித்தவர். குறிப்பாக, சமூகத்தின் மீதான அக்கறை மற்றும் சட்டத்தின் மீதான ஆர்வம் காரணமாகக் காவல்துறைப் பணியைத் தேர்ந்தெடுத்தார்.இவர் தனது கல்லூரிப் பருவத்திலிருந்தே தடகளப் போட்டிகளில் சிறந்து விளங்கியவர். கல்வியுடன் உடல் தகுதியையும் ஒருசேரப் பேணியது, இவர் மிகச் சிறந்த தடகள வீரராகவும், துடிப்பான அதிகாரியாகவும் உருவெடுக்க அடித்தளமாக அமைந்தது. தமிழகக் காவல்துறையில் குரூப்-1 அதிகாரியாகப் பணியைத் தொடங்கி, தனது சிறப்பான செயல்பாடுகளின் மூலம் ஐ.பி.எஸ் அந்தஸ்துக்குப் பதவி உயர்வு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. காவல்துறையில் உயரிய பொறுப்பில் இருந்தாலும், இவர்கள் இருவரும் தங்களது கல்வி அறிவை நவீன காலக் குற்றங்களைத் தடுப்பதற்கும், சட்டம்-ஒழுங்கைச் சீரமைப்பதற்கும் மிகச்சரியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2017-ஆம் ஆண்டு ஜல்லிக்கட்டுப் போராட்டத்தின்போது, திருச்சியில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மாணவர்களிடம் வன்முறை இன்றி, தனது கனிவான பேச்சால் அமைதியை நிலைநாட்டிய விதம் இவரைத் தமிழகம் முழுவதும் வைரலாக்கியது. 'லத்தி எடுக்காமல் போராட்டத்தைக் கலைத்த அதிகாரி' என்ற பெருமை இவருக்கு உண்டு.

திருச்சி மாநகர துணை ஆணையராக (சட்டம்-ஒழுங்கு) பணியாற்றியபோது, குற்றச் செயல்களை ஒடுக்குவதில் மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். சட்டத்தை மீறுபவர்களுக்குச் சிம்ம சொப்பனமாகவும், சாமானிய மக்களுக்குப் பாதுகாப்பு அரணாகவும் விளங்குபவர்.கடமை தவறாத அதிகாரி மட்டுமல்லாது, தடகளப் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். மாநில அளவிலான காவல் துறை தடகளப் போட்டிகளில் பல பதக்கங்களை வென்றவர் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, நிர்வாக நலன் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நியமனங்கள் அந்தந்த மாவட்ட மக்களிடையே பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளன.

## 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி

# தஞ்சையில், இருசக்கர வாகனத்தில் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்

## கலெக்டர் பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்




தஞ்சாவூர் மாவட்டம் அருங்காட்சியக வளாகத்தில் 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்கும் விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப அவர்கள் (02.04.2026) அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.தெ.தியாகராஜன் அவர்கள், சமூக பாதுகாப்புத்திட்ட தனித் துணை ஆட்சியர் திருமதி.சௌமியா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.உலகநாதன், வட்டாட்சியர் திரு.சிவக்குமார் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

---

# கஞ்சா வழக்கின் குற்றவாளி குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைப்பு.

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சரகத்தில் கஞ்சா விற்பனை செய்ததாக போதைப் பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட மேல கடையநல்லூர் இந்திரா நகர் பகுதியில் குடியிருக்கும் கொல்லி மாடசாமி மகன் இசக்கி துரை வயது (19) மீது வழிப்பறி அடிதடி கஞ்சா என பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் இவர் மீது பிரிவு 14 தமிழ்நாடு குண்டர் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் .ஏ.கே.கமல் கிஷோர் உத்தரவின் பேரில் மேற்படி நபர் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து கடையநல்லூர் க்ரைம் இன்ஸ்பெக்டர் மேரி ஜெனிதா கஞ்சா வழக்கில் கைது செய்து பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள இசக்கி துரரை யிடம் அதற்கான உத்தரவை வழங்கினர்.





# டெல்லியை துறந்து டார்கெட் 2026! திருமாவளவன் திடீர் முடிவின் பின்னணியில் இருக்கும் பலமான ஸ்கெட்ச் இதுதானா?

**இந்திய அரசியலில் தலித் மக்களின் குரலாகவும், நாடாளுமன்றத்தில் சனாதன அரசியலுக்கு எதிரான வலுவான ஆளுமையாகவும் அறியப்படுபவர் விசிக கட்சித் தலைவர் தொல். திருமாவளவன். இப்போது சிதம்பரம் மக்களவை உறுப்பினராக இருக்கும் அவர், திடீரென மாநில அரசியலை நோக்கித் தனது கவனத்தை திருப்பியிருப்பது தமிழக அரசியல் களத்தில் பெரும் விவாதங்களை கிளப்பியுள்ளது. இது எந்த அளவுக்கு விசிகவுக்கு கை கொடுக்கும்?**

வரும் சட்டமன்றத் தேர்தலில் காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அவர் போட்டியிடப்போவதாக அறிவித்திருப்பது, வெறும் தொகுதி மாற்றம் மட்டுமல்ல, அது ஒரு நீண்டகால அரசியல் வியூகத்தின் தொடக்கமாகவே பார்க்கப்படுகிறது. நாடாளுமன்றத்தில் எழுப்பப்படும் குரல்களை விட, ஒரு மாநிலத்தின் உரிமைகளையும், மக்களின் தேவைகளையும் நேரடியாகப் பிரதிபலிக்கும் இடமாக சட்டமன்றமே திகழ்கிறது என்பது திருமாவளவனின் வாதம்.

தமிழ்நாடு சட்டமன்றம்தான் தமிழ்நாட்டின் முகம்' என்று அவர் குறிப்பிட்டிருப்பது, தேசிய அரசியலை விட மாநில அரசியலில் நேரடியாகப் பங்கெடுப்பதன் மூலம் மட்டுமே ஆழமான மாற்றங்களை உருவாக்க முடியும் என்கிற அவரது முதிர்ச்சியான புரிதலைக் காட்டுகிறது. அமைச்சராக வேண்டும் என்ற ஆசை தனக்கில்லை என்றும், ஒரு சட்டமன்ற உறுப்பினராக மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்பதே தனது நீண்டகால விருப்பம் என்றும் அவர் கூறியிருப்பது, அதிகாரத்தைக் காட்டிலும் மக்கள் பணியே முக்கியம் என்ற செய்தியைத் தொண்டர்களுக்கு உணர்த்துகிறது.

திருமாவளவன் ஏன் காட்டுமன்னார்கோவில் தொகுதியைத் தேர்ந்தெடுத்தார் என்பது மிக முக்கியமான கேள்வி. இந்த தொகுதி விசிகவின் கோட்டையாகக் கருதப்படுகிறது. கடந்த காலங்களில் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைத் தவறவிட்ட வரலாறு இங்கு அவருக்கு உண்டு. சிதம்பரம் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட பகுதி என்பதால், அங்குள்ள மக்களுடன் அவருக்கு இருக்கும் நேரடித் தொடர்பு மற்றும் கட்சியின் வலுவான வாக்கு வங்கி ஆகியவை இந்த முறை

அவருக்குச் சாதகமான அம்சங்களாகப் பார்க்கப்படுகின்றன. டெல்லியில் இருந்து சென்னைக்குத் திரும்புவதன் மூலம், தமிழக அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள அவர் விரும்புவதாக தெரிகிறது.

வேட்பாளர்களை நானே தேர்வு செய்யும் கடைசித் தேர்தல் இது' என்று அவர் வலியுடன் குறிப்பிட்டிருப்பது, கட்சியை அதிகாரப் பரவலாக்கல் நோக்கி நகர்த்த அவர் எடுக்கும் முயற்சியையே காட்டுகிறது. மாவட்ட நிர்வாகிகளே வேட்பாளர்களை முடிவு செய்யும் ஜனநாயக முறையை வி.சி.க-வில் கொண்டு வர அவர் விரும்புவது ஒரு ஆரோக்கியமான அரசியல் மாற்றமாகும். திருமாவளவனின் வருகை காட்டுமன்னார்கோவில் தொகுதியில் பல முனைப் போட்டியை உருவாக்கினாலும், திமுக கூட்டணியின் பலம் அவருக்குப் பெரும் கவசமாக இருக்கும். அதே சமயம், இப்போதைய எம்எல்ஏக்களான ஷாநவாஸ், பாலாஜி போன்றோருக்கு வாய்ப்பு வழங்கப்படாதது சிறு வருத்தங்களை ஏற்படுத்தினாலும், தலைவரே களமிறங்குவதால் கட்சித் தொண்டர்கள் உற்சாகத்துடன் பணியாற்றுவார்கள் என்பதிலும் நோ டவுட்...!!. எச்.ஏ.பி (கூஷி.பு.ஊ) போன்ற சமூகக் காரணிகள் மற்றும் எதிர்க்கட்சிகளின் வியூகங்கள் அவருக்குச் சவாலாக இருக்கலாம். இருந்தாலும், ஒரு தேசிய தலைவராக பரிணமித்த பிறகு அவர் சட்டமன்ற தேர்தலை சந்திப்பது, நடுநிலை வாக்காளர்களின் கவனத்தையும் ஈர்க்கும்.

காட்டுமன்னார்கோவில் தொகுதியின் அரசியல் களம் கடந்த சில தேர்தல்களாகவே விசிக மற்றும் அதிமுக இடையே ஒரு கடுமையான மல்யுத்தக் களமாகவே இருந்து வருகிறது.. 2021 சட்டமன்றத் தேர்தலில் விசிக வேட்பாளர் சிந்தனைச் செல்வன் 49.20% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்ற நிலையில், அதிமுக 43.16% வாக்குகளுடன் மிக நெருக்கமான போட்டியைக் கொடுத்தது..

இந்தத் தொகுதியில் பட்டியலின மக்களின் வாக்குகள் சுமார் 36% ஆக இருப்பதால், அது விசிக-விற்கு ஒரு இயற்கையான பலமாக அமைகிறது.. இருந்தாலும், பாமக மற்றும் அதிமுக கூட்டணியின் ஒருங்கிணைந்த வாக்கு வங்கி விசிக-விற்கு எப்போதும் ஒரு சிம்மசொப்பனமாகவே இருந்து வருகிறது.. குறிப்பாக 2016 தேர்தலில் திருமாவளவன் வெறும் 87 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியைத் தவறவிட்டதுதான் வரலாறு, இங்குள்ள கள யதார்த்தத்தின் தீவிரத்தை உணர்த்துகிறது.

தற்போது திருமாவளவன் நேரடியாகக் களமிறங்குவது தொண்டர்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தினாலும், எதிர்தரப்பில் இருக்கும் வன்னியர் மற்றும் இதர சமூக வாக்குகளின் ஒருங்கிணைப்பு அவருக்கு ஒரு சவாலாக இருக்கும்.. அதுமட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் ஏன் மீண்டும் சட்டமன்றத்திற்கு வருகிறார் என்ற எதிர்க்கட்சிகளின் பரப்புரையையும், தொகுதி மக்களின் உள்ளூர் கோரிக்கைகளையும் அவர் திறம்பட எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.. வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்தாலும், ஒவ்வொரு வாக்கையும் கவனமாகச் செதுக்க வேண்டிய கட்டாயத்தில் விசிக இம்முறை இருக்கிறது என்பதையும் நாம் இங்கு பதிவு செய்ய வேண்டி உள்ளது.. காட்டுமன்னார்கோவில் முடிவு விசிகவின் முன்னேற்றத்துக்கு உதவுமா? பொறுத்திருந்து பார்ப்போம்..!!

---



# தாம்பரம் மாநகர போலீஸ் கமிஷனராக சஞ்சய் குமார் IPS பொறுப்பேற்றார்.. அவர் பணிசிறக்க நீதியின் நுண்ணறிவு பத்திரிகையின் சார்பாக வாழ்த்துகள்

## இரண்டு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ஒவ்வொன்றிலும் கடுமையான சட்ட பிரிவுகள் கீழ் மூன்று குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு

# குமரி.மாவட்ட எஸ்பியின் அதிரடி நடவடிக்கையில் சிக்கிய கல்குவாரிகள் மீது வழக்கு பாய்ந்தது.



**கன்னியாகுமரி மாவட்ட எஸ்பி டாக்டர் ஸ்டாலின் ஐபிஎஸ் அவர்கள் 30-03-2026 அன்று தோட்டியோடு அருகே சட்டவிரோதமாக இயங்கி வந்த கல்குவாரிகளில் திடீர் ஆய்வு செய்து அதில் இரண்டு கல்குவாரிகளுக்கு சீல் வைத்து வழக்கு பதிவு செய்திருப்பது குமரி மாவட்ட மக்களிடையே பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.**

இரண்டு கல்குவாரிகளுக்கும் இரண்டு குற்ற வழக்குகள் இரணியல் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு பல்வேறு சட்ட பிரிவுகளில் மூவர் மீதும் இரண்டு குற்ற வழக்குகளிலும் வழக்கு பதிவு செய்துள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதன்படி சட்ட விரோதமாக கனிம வளம் வெட்டி எடுத்த வழக்கில் இரணியல் காவல் நிலையத்தில் இரண்டு குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் குற்ற எண் 167/2026 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதில் பாரதிய நியாய சன்ஹிதா சட்ட பிரிவில் 223,289,303(2) மற்றும், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் ஒழுங்குமுறை சட்டம் 1957 பிரிவு 4(1)(ழி), 21(1),25 மற்றும் வெடிபொருள் சட்டம் 1908 பிரிவு 3, 5 ஆகிய எட்டு சட்டப்பிரிவுகளின் கீழ் குவாரி உரிமையாளர்களான

**1.ஜெகன், த/பெ. தானு தாஸ், சக்தி பவன், மெயின் ரோடு, பரசேரி**

**2.ஆல்பர்ட் த/பெ. ஜோசப், பனவிளை, சுங்கான் கடை,** மற்றும்

**3.கனரக வாகன ஆப்ரேட்டர் மற்றும் உரிமையாளர் தங்கராஜ்** அவரது இரண்டு ஹிட்டாச்சி வாகனம் மற்றும் கம்ப்ரஸர் மற்றும் வெடி மருந்தை வெடிக்க வைக்க பயன்படும் பொருள் ஆகியவை கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது இரணியல் காவல் நிலைய குற்ற எண் 168/2026 . அதில் பாரதிய நியாய சன்ஹிதா சட்ட பிரிவில் 223,289,303(2) மற்றும், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் ஒழுங்குமுறை சட்டம் 1957 பிரிவு 4(1)(ழி), 21(1),25 மற்றும் வெடிபொருள் சட்டம்



1908 பிரிவு 3, 4, 5 ஆகிய ஒன்பது சட்டப்பிரிவுகளின் கீழ் குவாரி உரிமையாளர்கள் மீதும் கனரக வாகன ஆப்ரேட்டர் மற்றும் உரிமையாளர் மீதும் அவரது இரண்டு ஹிட்டாச்சி வாகனம் மற்றும் கம்ப்ரஸர் மற்றும் வெடி மருந்தை வெடிக்க வைக்க பயன்படும் பொருள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது .

இதன் மூலம் குமாரி மாவட்டத்தில் சட்ட விரோதமாக கல்குவாரிகள் இயக்குபவர்கள் மற்றும் அதிக அளவு கனிமங்கள் வெட்டி எடுத்து கடத்தி வரும் கனிமவள மாபியா கும்பல்கள் பெரும் கலக்கமடைந்து உள்ளனர். மேலும் சட்ட விரோதமாக கல்குவாரிகள் செயல்படுவது கண்டுபிடிக்கப்பட்டாலோ சட்டவிரோதமாக கனிம வளம் கொண்டு செல்ல பாஸ் கண்டுபிடிக்கப்பட்டாலோ சட்டவிரோத கல்குவாரிகளை கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீதும் அதற்கு சட்டவிரோதமாக பாஸ் வழங்கிய அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு அவர்களையும் குற்ற வழக்கில் சேர்த்து கைது செய்யும் நிலை ஏற்படும் என்றும் மாவட்ட எஸ்பி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன் மூலம் தற்போதைய மாவட்ட எஸ்பி யால் குமரி மாவட்டத்தில் சட்டவிரோத கல்குவாரிகள் செயல்படுவது தடுக்கப்படும் என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த சில மாதங்களாக கல்குவாரிகளில் எஸ்பி ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுத்து வருவது கவனிக்கத்தக்கது. மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எதுவும் எடுக்காமல் கனிமவள கும்பல்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் நிலையில் எஸ் பி யின் அதிரடி நடவடிக்கை குமரி மாவட்ட மக்களுக்கு பெரும் வர பிரசாதமாகவே உள்ளது.

வள கும்பல்களுக்கு உடந்தையாக செயல்படும் அதிகாரிகளும் தற்போது மாவட்ட எஸ்பியின் நடவடிக்கையால் பெரும் கலக்கத்தில் உள்ளனர். வரும் நாட்களில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் இன்னும் தொடரும் என்பதும் கனிம வள கடத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதை கடமையாக கொண்டு செயல்படுபவர் குமரி மாவட்ட எஸ்பி தான் என்பது தான் தற்போது ஹைலைட்டான செய்தியாக உள்ளது.

---

**இப்ப சமீபத்துல ஒரு ரிட்டர்ட் பர்சன் வந்து 59 லட்சம் ரூபாய் இந்த டிஜிட்டல் அரெஸ்ட் மூலமாக இழந்திருக்கிறார்.**

இது என்ன அப்படினா ஒரு மாசமா இந்த அஃபென்ஸ் நடந்துருக்கிறது. அவர் யாருகிட்டயும் அதப்பத்தி சொல்லல ஒரு காவல் நிலையத்தில் இருந்து பேசுவதும் போல வீடியோ கால்ல போலியான காவல் நிலையத்தை உருவாக்கி அல்லது என்சிபி நாட்காட்டி கண்ட்ரோல் பீரோ என்று சொல்லக்கூடிய அந்த ஆபீஸ் செட்டப் வந்து உருவாக்கி உங்களை வீடியோ கால்ல கூப்பிட்டு உங்களுக்கு உள்ள பயத்தை உருவாக்கி உங்களை அரெஸ்ட் பண்ற மாதிரி இல்ல அரெஸ்ட் பண்ணிட்டதாகவே இல்ல நீங்க அந்த பணத்தை பே(pay) பண்ணலேன்னா லீகில் எக்ஸ்பென்சஸ் அப்படின்னு சொல்லுவாங்க ஏதோ ஒரு காரணத்தை சொல்லி உங்களை நம்ப வச்சு பயத்தை உருவாக்கி அதன் மூலமா இந்த டிஜிட்டல் அரெஸ்ட் மூலமா சைபர் கிரிமினல் சம்பாதிக்கிறாங்க. உங்க வீட்ல சீனியர் சிட்டிசன்ஸ் இருந்தாங்க அப்படினா அவங்க கிட்ட தயவுசெய்து



சொல்லுங்க இது பற்றி விழிப்புணர்வு உங்க கூட இருக்கக்கூடிய மற்ற சீனியர் சிட்டிசன்ஸ்க்கு சொல்லுங்க வங்கியில் வேலை பார்க்கக்கூடிய வங்கி அலுவலர்கள் யாராவது அன்யூஸ்புலா பேங்ல வந்து வித்ராவில் பண்ணாங்க அப்படினா அத நீங்க அவங்க கிட்ட பேசுங்க அப்படி வித்ராயல் வரும் போது கேளுங்க எதுக்காக இவ்வளவு வித்ராயல் பண்றீங்க அப்படிங்கறதக் கேட்டிங்கன்னா ஒரு சில நேரம் ஒரு பெரிய டிசாஸ்டர சைபர் கிரைம் டிசாஸ்டர் துடுக்கு முடியும்.

**சென்னை 2026-27 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி படிவங்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம், 2025-26 நிதியாண்டில் ஈட்டிய வருமானத்துக்காக தாக்கல் செய்ய வேண்டிய அனைத்து 7 வருமான வரி படிவங்களையும் அறிவித்துள்ளது. யார் யார் என்ன படிவங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்பதை இந்த பதிவில் பார்ப்போம்.**

ஏப்ரல் 1 முதல் மார்ச் 31 வரை நிதியாண்டு கணக்கிடப்படுகிறது. இன்று ஏப்ரல் 1ம் தேதி என்பதால் புதிய நிதியாண்டு ஆரம்பம் ஆகி உள்ளது. நாளை முதல் புதிய நிதியாண்டின் கணக்குகள் செயல்பட ஆரம்பிக்கும். புதிய நிதியாண்டு பிறக்கும் போது, வருமான வரி முதல் பல்வேறு விஷயங்களில் பல்வேறு மாற்றங்கள் மற்றும் சீர் திருத்தங்கள் இருப்பது வழக்கம் ஆகும். அதன்படியே 2026-27 மதிப்பீட்டு ஆண்டுக்கான வருமான வரி படிவங்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. இதுகுறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம், 2025-26 நிதியாண்டில் ஈட்டிய வருமானத்துக்காக தாக்கல் செய்ய வேண்டிய அனைத்து 7 வருமான வரி படிவங்களையும் அறிவித்திருக்கிறது.




இதில் முதல் 4 படிவங்கள் சிறு மற்றும் குறு வருமான வரி செலுத்துபவர்களுக்கானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.டி.ஆர் படிவம்-1 (சஹாஜ்) என்பது இதுவரை ஒரு வீடு வைத்திருப்பவர்கள் மட்டுமே இதைப் பயன்படுத்த முடிந்தது. இனி இரண்டு வீடுகள் மூலம் வருமானம் பெறுபவர்களும் இந்த படிவத்தைப் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ரூ.50 லட்சம் வரை வருமானம் கொண்ட சம்பளம் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கானது. 2-வது படிவம் முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கானது. ரூ.50 லட்சத்திற்கு மேல் வருமானம் உள்ள தனிநபர்கள் மற்றும் கூட்டு குடும்பத்தினர் இதனைப் பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

3-வது படிவம் தொழில் செய்பவர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கானது. தனிப்பட்ட முறையில் தொழில் அல்லது சுயதொழில் செய்பவர்கள், தனியார் நிறுவனங்களின் பங்குதாரர்களாக இருப்பவர்கள், தணிக்கை செய்ய வேண்டிய கட்டாயம் உள்ள வணிகம் செய்பவர்கள், கிரிப்டோகரன்சி சொத்துக்கள் மூலம் வருமானம் ஈட்டுபவர்கள் இந்த படிவத்தை தாக்கல் செய்ய வேண்டும்.

4-வது படிவம் (சுகம்) சிறு வணிகர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுக்கானது.இந்திய வருமான வரிச் சட்டம் பிரிவு 44பும்-ன் கீழ் வரும் வணிகர்கள். (இதன் படி, உங்கள் மொத்த விற்றுமுதல் அல்லது வருவாய் ளி2 கோடிக்கு மிகாமல் இருக்க வேண்டும்). : பிரிவு 44பும்பு-ன் கீழ் வரும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், பொறியாளர்கள், கணக்காளர்கள், தொழில்நுட்ப ஆலோசகர்கள் போன்றவர்கள் தாக்கல் செய்ய முடியும்.

ITR-4 படிவத்தில், உங்கள் ஒவ்வொரு சிறு செலவையும் அல்லது பற்று வரவு சீட்டுகளையும் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறப்படுகிறது. வணிகர்கள் தங்கள் மொத்த வருவாயில் குறைந்தபட்சம் 6% (டிஜிட்டல் பரிவர்த்தனை) அல்லது 8% (ரொக்கப் பரிவர்த்தனை) லாபமாகக் காட்டி வரி செலுத்தினால் போதும். தொழில் வல்லுநர்கள் தங்கள் வருவாயில் 50% லாபமாகக் காட்டினால் போதுமானது. உங்கள் வருமானம் சட்டப்பூர்வ வரம்பிற்குள் இருக்கும் வரை, நீங்கள் தணிக்கை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.

5-வது படிவம் நிறுவனங்கள் மற்றும் சங்கங்களுக்கானது. 6-வது படிவம் கம்பெனிகளுக்கானது. 7-வது படிவம் அறக்கட்டளைகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கானது. ஜூலை 23, 2024-க்கு முன் மற்றும் பின் செய்யப்பட்ட பரிவர்த்தனைகளைத் தனித்தனியாகக் கணக்கு காட்ட வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.1 கோடிக்கு மேல் இருப்பவர்கள் இனி தங்கள் சொத்து மற்றும் கடன் விவரங்களைக் கட்டாயமாகத் தெரிவிக்க வேண்டும். முன்பு இது ரூ.50 லட்சமாக இருந்தது. தாக்கல் செய்ய தனிநபர்களுக்கு வருகிற ஜூலை 31-ந்தேதியும், வணிகம் மற்றும் தொழில் செய்பவர்கள் ஆகஸ்டு 31-ந்தேதியும் தணிக்கை செய்யப்பட வேண்டிய கணக்குகளுக்கு அக்டோபர் 31-ந்தேதியும் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**வருமான வரி படிவம் வெளியீடு.. மாத சம்பளம் வாங்குவோர், சிறு வணிகர்கள்.. அறிய வேண்டியவை**

# மோகனூரில் சாதிவெறி தாக்குதல், கைது செய்ய சொல்லி போராட்டம் நடத்திய பாதிக்கப்பட்டவர்கள் மீது காவல்துறை தாக்குதல்...

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா மோகனூரில் பட்டியலின பறையர் சமூக மக்கள், பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு வரக்கம்போல வேம்பம்பட்டி முருகன் கோவிலுக்கு குஞ்சிதேவன் தெருவழியாக, பால்குடம் காவடி எடுத்துகொண்டு மேலதாளத்துடன் கொண்டாட்டமாக சென்றிருக்கிறார்கள்.

இதை பொறுத்துக்கொள்ள முடியாத சாதிவெறி கும்பல், கள்ளர் சாதியை சேர்ந்த விஜய் த/பெ ராமசாமி தலைமையில் ( இவன் ஓராண்டுக்கு முன் பறையர் சமூக பெண்ணை காதலித்து ஏமாத்தியதால் அந்த பெண் தற்கொலை செய்து கொண்டார், தற்கொலைக்கு தூண்டியதாக இவன் மீது வழக்கு உள்ளது) வினோத், மார்கண்டன், ஆதித்தியன், கார்த்திக், மதியழகன், முத்து, ஸ்ரீராம், ராமச்சந்திரன், ரமேஷ், சக்திவேல்,கூத்தூர் சூர்யா உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட கும்பல் பறையனுங்க அவ்வளவு கொண்டாட்டமா எங்க தெருவுக்குள்ள போறீங்களாடா என, கொடிய ஆயுதங்களான அறிவாள், பட்டாகத்தி, இரும்பு கம்பி, சுத்தியல், மரக்கட்டை போன்ற ஆயுதங்களால் கடுமையாக தாக்கியதில் 2 பெண்கள் உட்பட 11 க்கும் மேற்பட்டவர்களுக்கு பலத்த காயம் ஏற்பட்டு இவர்கள் அனைவரும் தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். அதில் பிரசாந்த் என்ற தமிழ்நாடு அரசு மின்சார ஊழியர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார். பல பேருக்கு தலை முகம் மார்பு வயிறு உள்ளிட்ட இடங்களில் வெட்டு காயங்களும், ஒருவருக்கு கை முறிவும் ஏற்பட்டிருக்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்த கிராமத்தினர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் என கந்தர்வகோட்டை காந்தி சிலை முக்கத்தில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் புதுக்கோட்டை-தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலை, பட்டுக்கோட்டை



நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் சுமார் 3 மணி நேரத்துக்கு மேலாக கடும் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து காவல் துணை கண்காணிப்பாளர் இரா.பிருந்தா தலைமையிலான போலீஸார், பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அவர்களை கலைந்து செல்லுமாறு வலியுறுத்தி உள்ளனர். அவர்கள் கலைந்து செல்லாததால், தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்தனர். இதில் புதுக்கோட்டை நகர காவல் ஆய்வாளர் சுகுமாறன் தாக்கியதில் 2 பெண்கள் உள்ளிட்ட 5 பேருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், தாக்குதலில் ஈடுபட்ட மற்றொரு தரப்பினரை போலீஸார் தேடி வருகின்றனர். இந்த சம்பவங்களை கண்டித்து கந்தர்வக்கோட்டை விசிக மாவட்டச் செயலாளர் தலைமையில் போராட்டங்கள் நடைபெற்றது.





தஞ்சை மாவட்டம் முழுவதும் காவல் நிலையங்களில் கட்டப்பஞ்சாயத்து சர்வ சாதாரணமாக கஞ்சா போதைப்பொருள் பான் பராக் விற்பனை பணம் கொடுக்கல் வாங்கல் விவகாரம் நிலம் விற்பது வாங்குவது உள்ளிட்ட பிரச்சனைகளில் தலையிடும் ரவுடிகள் சாம்ராஜ்யத்தை ஒழித்துக் கட்ட வந்து வந்துவிட்டார் இளம் அதிகாரி தஞ்சாவூர் மாவட்ட புதிய காவல்துறை கண்காணிப்பாளர் த.சுந்தரவதனம் **IPS** அவர்கள் வாழ்த்துக்கள்....

---

# தனியார் வங்கியில் வாடிக்கையாளருக்கு தெரியாமல் லாக்கரில் இருந்த சுமார் ரூ.1 கோடி மதிப்புள்ள தங்க நகைகளை எடுத்த வழக்கில் லாக்கர் பொறுப்பாளர் பெண் ஊழியர் கைது.



தனியார் வங்கி கிளை மேலாளர் திரு. அகமது காதிரி ஆ/வ 46, த/பெ. கப்பார் பாஷா, என்பவர் கடந்த 05.12.2025-ம் தேதி வங்கி பணியில் இருந்த போது நன்பகல் சுமார் 02.45 மணியளவில் வங்கியில் உள்ள இருக்கையில் கீழே விழுந்திருந்த சிறிய மணிபர்ஸை பரிசோதித்து பார்த்த போது அதில் சுமார் ரூ.1,34,95,000/- மதிப்புள்ள 1156.50 கிராம் தங்க நகைகள் இருந்ததாகவும், தங்கள் வங்கியில் இருந்த ளீளீவீ பதிவை ஆய்வு செய்த போது மேற்படி நகைகள் சற்று முன்பு வந்த பர்தா அணிந்த பெண் தான் தவறவிட்டு சென்றிருக்கலாம் என எண்ணி தாங்கள் காத்திருந்ததாகவும், ஆனால் பிறகு 5 நாட்கள் ஆகியும் நகைகளை தேடி யாரும் வரவில்லை என்பதால் இந்த நகைக்கு உரிய நபரை கண்டு பிடிக்க வேண்டி மேற்படி வங்கி மேலாளர் கொடுத்த புகாரின் பேரில் மத்திய குற்றப்பிரிவு சிம்ய்-3ல் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் புலன் விசாரணை செய்ததில் மேற்படி தனியார் வங்கி ஏற்கனவே வேலை பார்த்து வந்த பத்மபிரியா என்பவர் அந்த வங்கியில் வாடிக்கையாளர்களின் லாக்கரை தணிக்கை செய்ய வேண்டும் என லாக்கர் சாவியை பெற்று லாக்கரில் இருந்த சுமார் 246.49 கிராம் நகைகளை திருடியதாக கொடுத்த புகாரின் பேரில் சென்னை மத்திய குற்றப்பிரிவில் வழக்கு பதிவு செய்து எதிரி பத்மபிரியா என்பர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர், பிணையில் வெளியே வந்து லாக்கரில் இருந்து ஏற்கனவே திருடிய சுமார் 1156.50 கிராம் தங்க நகைகளை வங்கியில் யாருக்கும் தெரியாமல் திரும்ப வைத்து விட்டு சென்றது புலன் விசாரணையில் தெரிய வந்ததின் பேரில் சென்னை மத்திய குற்றப்பிரிவு **EDF-III** உதவி ஆணையாளர் தலைமையில், காவல் ஆய்வாளர் அடங்கிய காவல் குழுவினர் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி தலைமறைவாக இருந்த எதிரி பத்மபிரியா பெ/வ 38, க/பெ. சீனிவாசன், என்பவரை (02.04.2026) அன்று கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு எதிரி பத்மபிரியா (02.04.2026) அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.




# பேராவூரணியில் மீண்டும் தடம் பதிக்குமா தி.மு.க

**தமிழக அரசியலில் டெல்டா மாவட்டங்கள் எப்போதும் ஒரு மாற்றத்திற்கான விதையை விதைக்கும் இடமாகத் திகழ்கின்றன. அந்த வரிசையில், தஞ்சாவூர் மாவட்டத்தின் மிக முக்கியமான தொகுதியான பேராவூரணி, தற்போது உற்று நோக்கும் ஒரு பரபரப்பு மையமாக மாறியுள்ளது.**

1967ஆம் ஆண்டு தொகுதி மறுசீரமைப்பின் போது உருவாக்கப்பட்ட இந்த தொகுதி, நிரந்தர அரசியல் ஆதிக்கத்தை ஏற்காத ஸ்விங் தொகுதி என்ற பெயரை பெற்றுள்ளது. இந்த தொகுதியின் வாக்காளர்கள் செயல்திறன் அடிப்படையில் தீர்ப்பு வழங்கும் தன்மை கொண்டவர்கள் என்பதும் கடந்த தேர்தல் வரலாற்றிலேயே தெளிவாக தெரிகிறது. ஒரே கட்சி நீண்ட காலம் ஆதிக்கம் செலுத்தாத இந்த தொகுதி, மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கிய தொகுதியாக அரசியல் ஆய்வாளர்களால் பார்க்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில், தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் திரு. என். அசோக்குமார் அவர்கள் செய்த 'சாதனைகள்' என்று எதையும் சொல்லிக்கொள்ளும் படி இல்லை என்பதுதான் தொகுதி மக்களின் ஒட்டுமொத்த குமுறலாக இருக்கிறது. இதனை வெளிப்படுத்தும் விதமாக அண்மையில் மரக்காவலசை ஊராட்சி மக்கள் ஒட்டிய போஸ்டர், தமிழக அரசியலில் ஒரு புதுவிதமான அதிர்வை ஏற்படுத்தியுள்ளது.

எந்த ஒரு தொகுதியிலும் இல்லாத வினோதமான போராட்டத்தை மரக்காவலசை கிராம மக்கள் முன்னெடுத்துள்ளனர். பொதுவாக மக்கள் பிரதிநிதிகளுக்கு மாலை அணிவிப்பதும், வரவேற்பு கொடுப்பதும் வழக்கம். ஆனால், பேராவூரணி எம்.எல்.ஏ-வுக்கு மக்கள் அளித்திருப்பது ஒரு பெரிய 'வெள்ளை முட்டை'.

எங்கள் எம்.எல்.ஏ ஐந்து வருடத்தில் எதைச் சாதித்தார்?' என்ற கேள்விக்குப் பதிலாக, ஊர் முழுவதும் ஒட்டப்பட்டுள்ள போஸ்டரில் அவரது சாதனையாக ஒரு 'முட்டை' (பூஜ்யம்) படம் போடப்பட்டுள்ளது. இது ஏதோ விளையாட்டாகச் செய்யப்பட்ட காரியம் அல்ல; ஐந்து ஆண்டு கால புறக்கணிப்பின் ஆழமான வலி.



மக்கள் பட்டியலிடும் குறைகள்: சாலை வசதி: மரக்காவலசை முத்தரையர் குடியிருப்பு மற்றும் மரவன்வயல் பகுதிகளுக்கான தார் சாலை கோரிக்கை ஐந்து ஆண்டுகளாக மனுவாகவே உறங்குகிறது.

அடிப்படை கட்டமைப்பு: பச்சிளம் குழந்தைகளுக்கான அங்கன்வாடி மையமும், வெயிலிலும் மழையிலும் மக்கள் தவிப்பதைத் தவிர்க்கக் கடைத்தெருவில் நிழற்குடையும் கூட அமைக்கப்படவில்லை

பட்டா பிரச்னை: நீர்நிலை புறம்போக்கு பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரமான வீட்டு மனை பட்டா கோரிக்கையும் கண்டுகொள்ளப்படவில்லை.

வாக்கு கேட்க வரும்போது இருந்த அந்த ஆர்வம், வெற்றி பெற்ற பிறகு எங்கே போனது? என்று கேள்வி எழுப்பும் மக்கள், எம்.எல்.ஏ அசோக்குமார் தங்கள் பகுதியைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை என்று ஆதங்கப்படுகின்றனர். எங்களை எட்டியும் பார்க்காத நல்ல உள்ளத்திற்கு நன்றிகள் என்ற மக்களின் நக்கலான வாசகம், தற்போதைய எம்.எல்.ஏ-வின் செல்வாக்கு எவ்வளவு மோசமாகச் சரிந்துள்ளது என்பதற்குச் சான்றாகும்.

சாலை மேம்பாடு, குடிநீர் திட்டங்கள், வடிகால் வசதி, கிராமப்புற சாலை பழுது நீக்கம் போன்ற பணிகள் பல இடங்களில் தாமதமாக உள்ளதாக கூறப்படுகிறது. சில கிராமங்களில் குடிநீர் விநியோகம் சீராக இல்லாததால் மக்கள் இன்னும் டேங்கர் லாரிகளையே நம்பி வாழும் நிலை இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. விவசாயம் முக்கிய ஆதாரமாக இருக்கும் இந்த தொகுதியில் கால்வாய் சீரமைப்பு மற்றும் நீர்ப்பாசன பணிகள் முழுமையாக நடைபெறவில்லை என விவசாயிகள் தெரிவித்ததாக கூறப்படுகிறது. மேலும் பல பகுதிகளில் குடிநீர் சேமிப்பு தொட்டிகள் அமைப்பது போன்ற திட்டங்கள் அறிவிக்கப்பட்டும் முழுமையடையவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது.

இதனுடன், பேராவூரணி பகுதியில் நிதி முறைகேடு குறித்த விவகாரம் அரசியல் விவாதமாக மாறியுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதி பயன்படுத்தப்பட்ட விதம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவில், சுமார் ₹1 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி பணிகளில் முறைகேடு நடந்ததாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. சாலை மேம்பாடு, குடிநீர் வசதி, கால்வாய் சீரமைப்பு போன்ற பணிகள் நடைமுறையில் முழுமையாக நடைபெறாதபோதும், நிதி செலவிடப்பட்டதாக ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர்நீதிமன்றம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கோரி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. இந்த விவகாரம் வெளிவந்ததையடுத்து நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை குறைவு இருந்ததா என்ற கேள்வி எழுந்தது. திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மக்களுக்கு பயனளிக்க பயன்படுத்தப்பட்டதா என்ற சந்தேகமும் வாக்காளர்களிடையே பரவியது. இதனால் நிர்வாகத்தில் ஊழல் நடந்திருக்கலாம் என்ற கருத்தும் உருவாகியுள்ளது.

மேலும் பொதுமக்கள் மத்தியில் சமூக அடிப்படையிலான அதிருப்தியும் உருவானதாக கூறப்படுகிறது. அரசு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சி பணிகளில் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டதாக சில பகுதிகளில் குற்றச்சாட்டு எழுந்தது. வீட்டு திட்டங்கள், சாலை மேம்பாடு, குடிநீர் இணைப்புகள் போன்றவை சில குறிப்பிட்ட பகுதிகளிலேயே அதிகமாக வழங்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர். இதனால் பிற சமூகங்களைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்ததாக கூறப்படுகிறது. இந்த உணர்வு தேர்தல் நேரத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகம் என அரசியல் ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர். சமூக சமநிலை குறித்த கேள்விகளும் தேர்தல் விவாதங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.



தற்போதைய ஆளுங்கட்சி எம்.எல்.ஏ-வுக்கு எதிராக இவ்வளவு பெரிய எதிர்ப்பு அலை வீசும் நிலையில், மக்களின் ஒட்டுமொத்த பார்வையும் இப்போது அதிமுக-வின் பக்கம் திரும்பியுள்ளது. குறிப்பாக, அதிமுக வேட்பாளராகக் களம் காணும் கோவி. இளங்கோ (முன்னாள் எம்.எல்.ஏ கோவிந்தராசுவின் புதல்வர்) மக்கள் மத்தியில் ஒரு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளார்.

எளிமையும் அணுகுமுறையும்: தற்போதைய எம்.எல்.ஏ-வை சந்திக்கவே முடிவதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கும் நிலையில், இளங்கோ அவர்கள் எளிய மக்களும் எளிதில் அணுகக்கூடிய ஒரு நபராகப் பார்க்கப்படுகிறார்.

வாரிசு என்றாலும் உழைப்பாளி: முன்னாள் எம்.எல்.ஏ கோவிந்தராசுவின் மகன் என்ற அடையாளம் இருந்தாலும், இவர் தனது சொந்த உழைப்பின் மூலமும், மக்களின் நீண்டகாலப் பிரச்னைகளுக்காகக் குரல் கொடுப்பதன் மூலமும் தனக்கென ஒரு தனி இடத்தை உருவாக்கியுள்ளார்.ள்ளது: வேலை செய்யாதவருக்குப் பாடம் புகட்ட வேண்டும்; மக்களின் வலியைப் புரிந்துகொள்ளும் இளங்கோ போன்றவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மக்கள் ஆதரவு இளங்கோ பக்கமே இருந்தாலும், அதிமுக-வின் வெற்றிக்கு ஒரு முக்கியமான தடையைக் கட்சியினரே உணர்ந்துள்ளனர். அதுதான் கட்சிக்குள் இருக்கும் பிளவு. தற்போது அதிமுக இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கிடப்பது தொண்டர்களிடையே ஒருவிதக் குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மைதான்.இதற்கிடையில் நாம் தமிழர் கட்சி மற்றும் தமிழக வெற்றிக் கழகம் ஆகிய கட்சிகளும் இம்முறை தேர்தலில் கணிசமான வாக்குகளை ஈர்க்கும் வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. குறிப்பாக இளைஞர்கள் மற்றும் புதிய வாக்காளர்கள் மத்தியில் இந்த கட்சிகளுக்கு ஆதரவு அதிகரித்துள்ளதாக அரசியல் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இதனால் பாரம்பரிய வாக்கு தொகுப்புகள் சிதறக்கூடும். மூன்றாவது மற்றும் நான்காவது அரசியல் சக்திகள் களமிறங்குவதால் வாக்கு விகிதங்களில் மாற்றம் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது.

கணிப்புகள் என்ன சொல்கின்றன?

2021 தேர்தலில் சில காரணங்களால் கை நழுவிப்போன இந்தத் தொகுதியை மீட்பது இளங்கோவுக்கு எளிதான காரியம் தான். ஆனால் அதற்கு அதிமுக ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பது தொண்டர்களின் எதிர்ப்பாக உள்ளது.

இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கும் தலைமையும், உள்ளூர் நிர்வாகிகளும் இளங்கோவின் வெற்றி என்ற ஒற்றை இலக்கை நோக்கி ஒன்றிணைந்தால், 2026 தேர்தலில் அதிமுக-வின் வெற்றி தவிர்க்க முடியாதது.

பிரிந்திருக்கும் வாக்குகளை ஒருங்கிணைக்க இளங்கோவின் தனிப்பட்ட செல்வாக்கு பெரும் உதவியாக இருக்கும் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

தற்போதைய எம்.எல்.ஏ-வின் மீது இருக்கும் ஆன்டி-இன்கம்பன்சி (ஆட்சேபனை அலை) மற்றும் மக்கள் கொடுத்த முட்டை முத்திரை, இளங்கோவுக்குச் சாதகமான வாக்குகளாக மாறும். பேராவூரணி தொகுதி மக்கள் இப்போது தெளிவாக இருக்கிறார்கள். வெறும் வெற்று வாக்குறுதிகளையும், முட்டை சாதனைகளையும் அவர்கள் இனி ஏற்கப் போவதில்லை. அடிப்படை வசதிகளைத் தராத, தங்களை எட்டிப்பார்க்காத ஒரு பிரதிநிதிக்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் தயாராகிவிட்டனர். அதே சமயம், இளங்கோ போன்ற திறமையான மற்றும் மக்கள் செல்வாக்கு மிக்க வேட்பாளர்கள் களமிறக்கப்படுவது அதிமுக-வுக்குப் பெரும் பலம். கட்சியின் உட்பூசல்களைத் தூக்கியெறிந்துவிட்டு, ஒருமித்த கருத்துடன் அதிமுக களப்பணியாற்றினால், பேராவூரணி கோட்டை மீண்டும் இரட்டை இலை வசமாவது உறுதி.

முட்டை சாதனை படைத்தவர்களுக்கு மக்கள் விரைவில் தங்கள் தேர்தல் தீர்ப்பின் மூலம் விடை கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.வெற்றி யாருக்கு என்பது மக்களின் கைகளில் இருக்கிறது.




# தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமல்.. FASTag கட்டாயம்! ரொக்கமாக கொடுக்க முடியாது

**தமிழகத்தில் சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது. சுமார் 60 சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல் ரொக்கமாக பணம் செலுத்தும் நடைமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கப்பலூர் சுங்கச்சாவடியில் சுங்கக் கட்டணம் ரூ.5 முதல் 15 வரை உயர்வு அமலுக்கு வந்திருக்கிறது. சுங்க கட்டண உயர்வால் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.**

இணையவழி வழியாகவோ அல்லது பாஸ்டேக் மூலமாகவே கட்டணம் செலுத்தும் முறை அமலுக்கு வந்துள்ளது. எனவே கையில் ரொக்கமாக பணம் கொடுத்து சுங்கச்சாவடிகளில் செல்ல முடியாது.

தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் வருடாந்திர கட்டண உயர்வு முடிவின்படி சுங்கக் கட்டணமானது மாற்றப்படுகிறது. அதன்படி தான் நள்ளிரவு முதல் தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வானது அமலுக்கு வந்துள்ளது. தமிழகத்தில் செயல்பட்டு வரும் சுங்கச்சாவடிகளில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டணமானது உயர்ந்துள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 6 சுங்கச்சாவடிகளில் 5 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமலுக்கு வந்திருக்கிறது. குறைந்தபட்சமாக ரூ 10 முதல் 25 ரூபாய் வரை கட்டண உயர்வு நடைமுறைக்கு வந்துள்ளது.


குறிப்பாக கார், ஜீப் உள்ளிட்ட வாகனங்கள் ஒருமுறை பயணிக்க ரூ.35 ரூபாயும், இருமுறை பயணிக்க 50 முதல் 55 ரூபாயும், மாதாந்திர கட்டணம் 1,165 இல் இருந்து 1195 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இலகுரக வாகனங்கள் ஒரு முறை செல்ல 60 ரூபாயும், இருமுறை செல்ல ரூ. 85 ஆகவும், மாதாந்திர கட்டணம் ரூ.1,880 இல் இருந்து ரூ.1925 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கனகர வாகனங்களுக்கு இந்த கட்டணமானது 5 முதல் ரூ.50 வரை அதிகரித்துள்ளது. இணையவழி வழியாகவோ அல்லது பாஸ்டேக் மூலமாகவே கட்டணம் செலுத்தும் முறை அமலுக்கு வந்துள்ளது.

# பட்டா மேல்முறையீடுகளை முடிக்க தாசில்தார்களுக்கு 30 நாட்கள் கெடு

**பட்டா தொடர்பான மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்து, தாசில் தார்கள் நடவடிக்கை எடுப்பதற்கான காலக்கெடு, 30 நாட்களாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக, நில நிர் வாகத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.**

வீடு, மனை வாங்குவோர், அதற்கான பத்திரப்பதிவு முடிந்து, தங்கள் பெயருக்கு பட்டா மாறுதல் கோரி விண்ணப்பிக்கின்றனர். இ–சேவை மையங்கள் வாயிலாக தாக்கலாகும் முறையீடு செய்யலாம். இதற்கான மனுக்கள் மீது, 30 நாட்களில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில், இயல்பான பட்டா பெயர் மாற்றம், 15 நாட்களிலும், உட்பிரிவு உருவாக்க வேண்டி இருந்தால், 30 நாட்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், ஆன்லைன்' முறையில் விண்ணப்பித்தாலும் தாலுகா அலுவலக அதிகாரிகள், இந்த பணிகளை முறை யாக செய்வதில்லை. இருப்பினும், பல இடங்களில் பட்டா மாறுதல் செய்யும்போது, அதில் அளவுகளை தவறாக குறிப்பிடுவது, உரிமையாளர் பெயரில் பிழைகள் ஏற்படுத்துவது என, பல்வேறு தவறுகள் நடக்கின்றன. இந்த தவறுகளை சரி செய்ய, மக்கள் தாலுகா அலுவலகங்களில் மேல்முறையீடு செய்யலாம். இது மட்டுமல்லாது, ஒரு நபருக்கு வழங்கப் பட்டபட்டா தவறானது என தெரியவரும் நிலை யில், வெளியாட்கள் அதை ரத்து செய்ய மேல்முறையீடு செய்வர். இதுபோன்ற மேல்முறையீட்டு மனுக்கள் மீது, தாசில்தார்கள் நட வடிக்கை எடுப்பதில்லை என புகார் கூறப்படுகிறது. இது குறித்து, நில நிர்வா கத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: பட்டா தொடர்பான மேல்முறையீடுகளை, தாசில்தார்கள் அல்லது மாவட்ட வருவாய் அலு வலர்கள் விசாரிக்க வேண்டும். இந்த விசாரணை பணிகளை, 30 நாட்களுக்குள் முடிக்க வேண்டும். ஆனால், இந்த கால அவகாசம் குறித்து, பொது மக்களுக்கு தாசில் தார்கள் தெரிவிப்பது இல்லை. இதனால், மக்கள் ஆண்டுக்கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்ப டுகிறது.



10/10/24, 10:21 AM வட்டாட்சியர் அலுவலக இணைய சேவை - நில உரிமை விபரங்கள்

தமிழ்நாடு அரசு

வருவாய்த் துறை

நில உரிமை விபரங்கள் : இ. எண் 10(1) பிரிவு

மாவட்டம் : பெரம்பலூர் வட்டம் : பெரம்பலூர்

வருவாய் கிராமம் : பெரம்பலூர் (வடக்கு) பட்டா எண் : 2423

உரிமையாளர்கள் பெயர்

1. துரைசாமி நாடார் மகன் சுயம்பு(எ)லிங்கராஜ்

| புல எண் | உட்பிரிவு | புன்செய் | | நன்செய் | | மற்றவை | | குறிப்புரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரப்பு | தீர்வை | பரப்பு | தீர்வை | பரப்பு | தீர்வை | |
| | | ஹெக் - ஏர் | ரூ - பை | ஹெக் - ஏர் | ரூ - பை | ஹெக் - ஏர் | ரூ - பை | |
| 319 | 9B1 | 0 - 2.81 | 0.10 | -- | -- | -- | -- | 2017/0105/16/018690--2017/16/03/001156SD -------- 22-09-2017 |
| | | 0 - 2.81 | 0.10 | | | | | |

குறிப்பு :

1. மேற்கண்ட தகவல் / சான்றிதழ் நகல் விவரங்கள் மின் பதிவேட்டிலிருந்து பெறப்பட்டவை. இவற்றை தாங்கள் **https://eservices.tn.gov.in** என்ற இணைய தளத்தில் **16/03/641/02423/30161** என்ற குறிப்பு எண்ணை உள்ளீடு செய்து உறுதி செய்துகொள்ளவும்.
2. இத் தகவல்கள் 10-10-2024 அன்று 10:23:30 AM நேரத்தில் அச்சடிக்கப்பட்டது.
3. கைப்பேசி கேமராவின்2D barcode படிப்பான் மூலம் படித்து 3G/GPRS வழி இணையதளத்தில் சரிபார்க்கவும்

---




வந்தே பாரத் ரயிலில் பயணி ஒருவருக்கு பரிமாறப்பட்ட உணவில் புழு கிடந்ததாக எழுந்த புகாரில் ஐ.ஆர்.சி.டி.சி.க்கு ரூ.10 லட்சம் அபராதம் விதித்த ரயில்வே அமைச்சகம் கடந்த 15–ம் தேதி பாட்னா டாடா நகர் இடையே இயக்கப்பட்ட வந்தே பாரத் ரயிலில் நடந்த இந்த சம்பவத்தின் வீடியோ இணையத்தில் வைரலான நிலையில், சம்பந்தப்பட்ட உணவு நிறுவனத்திற்கு ரூ.50 லட்சம் அபராதம் விதிப்பு

# புதுக்கோட்டை மாவட்டம் தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக மையம் ஆய்வு



தேர்தல் கட்டுப்பாட்டு அறை மற்றும் ஊடக மையம் ஆகியவற்றின் செயல்பாடுகளை, 178-கந்தர்வகோட்டை (தனி) மற்றும் 179-விராலிமலை சட்டமன்றத் தொகுதிகளுக்கான இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் செலவினப்பார்வையாளர் திரு.அமிட் குமார் நிக்கலஜி. இ.வ.ப.. அவர்கள் மற்றும் 180-புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிகளுக்கான இந்திய தேர்தல் ஆணையத்தின் தேர்தல் செலவினப் பார்வையாளர் திரு.வி.விவேகானந்த ரெட்டி, இ.வப.. அவர்கள் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

---

# நாட்டாணிக்கோட்டை ஊர் பொதுமக்கள் தேர்தலை புறக்கணிக்க முடிவு




நாட்டாணிக்கோட்டை கிராமத்தில் இனாம் நிலங்களுக்கு இனாம்தாரர் பெயரிலுள்ள பட்டாவை ரத்து செய்து பல தலைமுறைகளாக அந்த இடத்தில் வாழ்ந்து விவசாயம் செய்து வரும் கிராம மக்களுக்கு ரயத்துவாரி பட்டா கொடுக்கும் வரை வாக்களிக்க மாட்டோம் என்று முடிவு செய்துள்ளனர்.

# கும்பகோணம் கிழக்கு காவல்நிலையம் வாகன திருட்டில் ஈடுபட்ட குற்றவாளி கைது




இருசக்கர வாகன திருட்டில் ஈடுபட்ட குற்றவாளி கும்பகோணம் கிழக்கு காவல்நிலைய போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

---







# வாக்குறுதி ....



கடமையில் வாக்குறுதி காரியத்தை சிதைக்கும்
காவல்துறையில் வாக்குறுதி ஜெயிலுக்கு அழைக்கும்

பெண்ணுக்கு வாக்குறுதி காதலை முறிக்கும்
ஆணுக்கு வாக்குறுதி கடனை சுமக்கும்

அரசியல் வாக்குறுதி ஆகாயத்தில் பறக்கும்
அண்டைவீடு வாக்குறுதி அடிதடியில் இறங்கும்

படிப்பில் வாக்குறுதி அறிவை திறக்கும்
பணத்தில் வாக்குறுதி உறவை முறிக்கும்

உழைப்பில் வாக்குறுதி உயர்வை அழைக்கும்
உண்மையின் வாக்குறுதி நேர்மையை கொடுக்கும்

இமையின் வாக்குறுதி விழிகளை காக்கும்
இதயத்தின் வாக்குறுதி உயிரினை போக்கும்

வாக்குறுதியை நிறைவேற்றினால் வாசாப்பு கிடைக்காது
வாக்குகளைப் பெற்றிட்டு மறக்கவும் கூடாது

**சி.சுபாஷ் சந்திர போஸ்**
**(காவல்துணை கண்காணிப்பாளர் ஓய்வு)**



**மதுரை மாநகரின் புதிய காவல் ஆணையராக திரு. அபிஷேக் தீக்சித் இ.கா.ப., அவர்கள் (03.04.2026) அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பணி சிறக்க நீதியின் நுண்ணறிவு பத்திரிகையின் சார்பாக வாழ்த்துகள்....**

---

# திருடப்பட்ட தங்க நகைகளை மீட்ட ரயில்வே காவல்துறை




திருச்சி ரயில்வே காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஷ் பச்சேரா இ.கா.ப உத்தரவின் பேரில் மதுரை உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் இளங்கோவன் அறிவுரையின் பெயரில் மதுரை ரயில் நிலையத்தில் ரயிலில் பயணம் செய்து வந்த பெண்ணின் கைப்பையை எடுத்துக்கொண்டு சென்றவர்களை தேடும் பொருட்டு குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டு ளீளீவீா பதிவுகளின் அடிப்படையில் திருப்பூரை சேர்ந்த அங்கமுத்து மற்றும் சதீஷ்குமார் ஆகியோரை மதுரை ரயில்வே காவல் நிலைய ஆய்வாளர் சாவித்ரி தலைமையிலான குற்றப்பிரிவு தனிப்படையினர் பிடித்து திருடப்பட்ட தங்க நகைகளை மீட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.




தஞ்சாவூர் மாவட்டம் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி மெய்யின் உறுதிமொழி ' என்ற குறியீட்டினை (**QR-Code**) மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப அவர்கள் (01.04.2026) அன்று வெளியிட்டார்கள்.

---




தஞ்சாவூர் மாவட்டம் அன்னை சத்யா விளையாட்டு அரங்கில் 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி முதல்முறை வாக்காளர்கள் 1000 கல்லூரி மாணவ-மாணவியர்களின் விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் (01.04.2026) அன்று நடைபெற்றது.

---



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2026 முன்னிட்டு, தேர்தல் பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்களுக்கான சீற்றமயமாக்கல் (**RANDOMIZATION**) பணிகள் தேர்தல் பார்வையாளர்கள் தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யாதண்ணீரு இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது.

---

# ஆயுதங்களுடன் ரீல்ஸ் எடுத்தவர்கள்கள் கைது கடும் எச்சரிக்கை...





திருச்சி மாவட்டம், கல்லக்குடி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக கையில் ஆயுங்களுடன் **Reels** எடுத்து அதனை **Instagram** –ல் பதிட்ட நபர்களை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.செ.செல்வநாகரத்தினம், இ.கா.ப., அவர்களின் உத்தரவின்படி கல்லக்குடி காவல்துறையினர் கைது செய்தனர். இதுபோன்று பொதுமக்களை அச்சுறுத்தும் விதமாக பயங்கர ஆயுதங்களுடன் யூஎளயிவி எடுத்து பதிவிடும் நபர்கள் மற்றும் பைக் சாகசங்களில் ஈடுபட்டு அதனை யூஎளயிவி எடுத்து பதிவிடும் நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.



# சென்னையில் லீசுக்கு குடியேறும் வீடு 20 லட்சம், ஏமாற்றும் வீட்டு ஓனர்கள் உஷார்

**இன்று சென்னையில் வாடகைக்கு நல்ல வீடு, குறைந்த வாடகையில் கிடைப்பது சவாலாக மாறி உள்ளது. அதேபோல் இன்றைக்கு சென்னையின் முக்கிய பகுதிகளில் ஓரளவு குத்தகை பணத்தில் நல்ல வீடு லீசுக்கு கிடைப்பது குதிரைக்கொம்பாக உள்ளது.**

இதனை பயன்படுத்தி தான் பல்வேறு ஆப்கள் வளர்ந்து வருகின்றன. இந்த டிமாண்டை பயன்படுத்தி ஏலம் போகும் அளவிற்கு வீட்டின் பெயரில் கடன் வாங்கியவர்கள், கடன் வாங்கி ஏமாற்றியவர்கள் மோசடி செய்கிறார்கள். சென்னை நொளம்பூரில் கைது ஏலம் போன வீட்டை லீசுக்கு விட்டு 20 லட்சம் மோசடி செய்த நபர் சிக்கியுள்ளார். எப்படி ஏமாற்றினார்.. என்ன நடந்தது என்பதை பார்ப்போம்.

சென்னையில் வாடகைக்கு அல்லது ஒத்திக்கு வீடு தேடுவோர் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக அதிகப்பணத்தை முன்பணமாக கொடுத்து ஒத்திக்கு வீடு பார்ப்பவர்கள் வீடு உண்மையில் அவருடையது தானா. அந்த வீட்டின் பெயரில் கடன் உள்ளதா.. வீடு அடமானத்தில் உள்ளதா.. என்பதை உறுதி செய்வது நல்லது. வெறும் 100 ரூபாய் பத்திரத்தில் உங்களிடம் நிபந்தனைகளை எழுதி அப்படியே ஒரு பத்திரம் போட்டுக்கொடுத்தால் மட்டும் போதாது. இருவரும் வாடகை ஒப்பந்தத்தை பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.. அப்படி பதிவு செய்தால் தான் சிக்கல் வராது.. அப்படி பதிவு செய்வது கட்டாயமும் கூட..

ஏனெனில் அடமானத்தில் அல்லது ஏலத்தில் உள்ள வீட்டை உங்கள் தலையில் கட்டி பணம் பார்த்துவிட்டு ஏமாற்றுபவர்கள் இருக்கிறார்கள். சென்னையில் அப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளது. கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த தீபக் என்பவர் கடந்த 2024ம் ஆண்டு ஆன்லைன் மூலம் முகப்பேர் பகுதியில் வீடு பார்த்துள்ளார். அப்போது முகப்பேர் மேற்கு வள்ளலார் தெருவைச் சேர்ந்த ராஜகோபாலன் (59வயது) என்பவருடைய அறிமுகம் கிடைத்துள்ளது.

ராஜகோபாலன் தனக்கு சொந்தமாக முகப்பேர் பன்னீர் நகரில் உள்ள வீட்டை கடலூர் தீபக்கிற்கு ரூ.20 லட்சத்திற்கு குத்தகைக்கு விட்டுள்ளார். அந்த வீட்டிற்கு கடந்த 2024ம் ஆண்டு தீபக் குடிவந்துள்ளார். அடுத்த சில மாதங்களிலேயே அந்த வீட்டிற்கு ஜப்தி நோட்டீஸ் வந்துள்ளது.

அதில் வீட்டை தனியார் நிதி நிறுவனத்திடம் கடந்த 2017ம் ஆண்டு ராஜகோபாலன் அடகு வைத்துள்ளார். அதன் மூலம் 79 லட்சம் பணம் பெற்றுள்ளார். அந்த கடனை திரும்ப செலுத்தவில்லை என கூறப்படுகிறது. இதனால் தனியார் நிறுவனம் ராஜகோபலனின் வீட்டை ஏலத்தில் விட்டுள்ளது. ஏலத்தில் எடுத்த மற்றொரு நிறுவனம் வீட்டை ஜப்தி செய்ய நோட்டீஸ் அனுப்பியது.

இதையடுத்து வீட்டில் இருந்து தீபக் வெளியேற்றப்பட்டார். ராஜகோபாலனிடம் குத்தகையாக கொடுக்கப்பட்ட 20 லட்சம் பணத்தை திரும்பி கேட்டுள்ளார். ஆனால் ராஜகோபாலன் பணத்தை தராமல் காலம் தாழ்த்தி வந்துள்ளார். இதனால் மனஉளைச்சலுக்கு ஆளான தீபக், நொளம்பூர் போலீசில் புகார் அளித்தார். போலீசார் மோசடி புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்தனர். இதனிடையே தலைமறைவான ராஜகோபாலனை நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். ராஜகோபாலன் மீது ஏற்கனவே ஒரு மோசடி வழக்கு உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.



# சட்டம் கற்றுக்கொள்ளுங்கள் அது உங்களை தலைநிமிர்ந்து வாழ செய்யும்...

**போலி ஆவணம் மற்றும் மோசடி ஆவணம் இரத்து செய்வது பற்றிய சட்டம் ஒரு பார்வை.**

1. போலி ஆவணப்பதிவு தொடர்பாக மாவட்ட பதிவாளர்கள் பதிவு சட்டம் 1908 பிரிவு 77 (பு) இன் கீழ் எவ்வாறு விசாரணை செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. கடித எண்: 45633/யு1/2022,நாள்: 04.01.2022.
2. தமிழ்நாடு சட்டம் 41/22 இன் கீழ் போலி ஆவணங்களை ரத்து செய்வது குறித்து தெளிவான அறிவுரைகளும் வழிகாட்டுதலும் பதிவுத்துறை தலைவர் அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்: 33760/யு1/2022,நாள்: 27.09.2022.
3. பதிவுச் சட்டப்பிரிவு 22(ஏ) மற்றும் 22(பி) க்கு எதிராக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பதிவுச் சட்டப்பிரிவு 77(ஏ) இன் கீழ் மாவட்ட பதிவாளர்கள் விசாரணையில் கண்டறிந்தால் அதனை இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். போலி ஆவணம் என்ற தெரிந்த பின்னரும் பதிவு சட்டப்பிரிவு 67(2) கீழ் அதை தவிர்த்து உரிமையியல் நீதிமன்றத்தில் தீர்வு காண உத்தரவு பிறப்பிக்க கூடாது. மேலும் 16.08.2022 க்கு பிறகு பெறப்பட்ட மனுக்களை பதிவுச் சட்டப்பிரிவு 77(ஏ) இன் கீழ் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். 16.08.2022 க்கு முன்பு மனுக்கள் பெறப்பட்ட மனுக்கள் விசாரணையில் பொலி ஆவணம் என தெரியவந்தால் மனுதாரரிடம் மீண்டும் ஒரு மனுவை பெற்று இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் அதனை தவிர்த்து பதிவுச் சட்டப்பிரிவு 68(2) இன் கீழ் ஆணை பிறப்பிக்க கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

**ஆதாரம்:**

1. வழக் கு எண்: **W.P. NO: 33674/2022 and W.M.P. NO:** 33130/2022, நாள்: 15.12.2022.
4. மோசடி மற்றும் போலி ஆவணங்களை ரத்து செய்வது குறித்து தமிழ்நாடு அரசு சட்ட எண்: 41/2022, பதிவு சட்டம் 1908 பிரிவு 22(பி), 77(ஏ), 77(பி), 81(ஏ) மற்றும் 81(பி) ஐ உட்புகுத்தி திருத்தம் செய்யப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் மற்றும் மேலும் பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. அரசிதழ் வெளியீடு எண்: 428, நாள்: 16.08.2022.
2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை கடித எண்: 24819/சி1/2021, நாள்:14.09.2021.
5. ஆவணங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யும் போது முன் பதிவு அசல் ஆவணம் (முந்தைய ஆவணங்கள்) மற்றும் வில்லசங்க சான்று தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அந்த பதிவு ஆவணத்தை பதிவு அலுவலர்கள் மறுக்க அதிகாரம் வழங்கி பதிவு சட்டம் 1908 இல் பதிவு விதி 55(ஏ) ஐ உட்புகுத்தி அரசாணை வெளியீடு செய்து அதனை தமிழ்நாடு அரசிதழில் வெளியீட்டு பதிவுத்துறை தலைவர் அவர்களால் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. அரசாணை எண்: 129, நாள்:05.09.2022,
2. தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு எண்: 438, நாள்: 05.09.2022,
3. பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கை கடித எண்: 22482/சி1/2021, நாள்: 14.09.2022.
6. பதிவு சட்டம் 1908 பிரிவு 68(2) இன் படி விசாரணையில் மோசடி அல்லது போலி ஆவணம் என தெரியவந்தால் போலி ஆவணம் தயாரித்து பதிவு செய்ய உறுதுணையாக இருந்தவர்கள் மீது பதிவு சட்டம் 1908 பிரிவு 83 இன் கீழ் குற்றவியல் நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். மேலும் போலி ஆவணம் தயாரிப்பில் ஈடுபட்ட ஆவண எழுத்தர் மற்றும்

வழக்கறிஞரை விசாரணைக்கு உட்படுத்தி உரிய குற்றவியல் நடவடிக்கை எடுப்பதோடு ஆவண எழுத்தர் உரிமம் விதிமுறைகள் 1982 இன் கீழ் 'பி' மற்றும் 'சி' உரிமமாக இருப்பினும் அதனை ரத்து செய்ய மாவட்ட பதிவாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், 'ஏ' உரிமமாக இருப்பின் அதனை ரத்து செய்ய மாவட்ட பதிவாளர் சம்பந்தப்பட்ட துணைபதிவுத்துறை தலைவருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். வழக்கறிஞராக இருப்பின் அவன் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட பதிவாளர் வழக்கறிஞர் கழகத்திற்கு அறிக்கை அனுப்ப வேண்டும். மேலும் இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 68(2) இன் கீழ் சொத்தில் உரிமை குறித்த வழக்குகளை எக்காரணம் கொண்டும் விசாரணைக்கு உட்படுத்த கூடாது என்று பதிவு துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையில் தெளிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. கடித எண்: 41530/யு1/2017,நாள்: 25.03.2022.
2. கடித எண்: 41530/யு1/2017,நாள்: 09.07.2021.
3. கடித எண்: 41530/யு1/2017,நாள்: 31.07.2018.
4. கடித எண்: 41530/யு1/2017,நாள்: 08.11.2017.

7. கடந்த காலங்களில் பதிவுத்துறையில் நடந்த பதிவு முறைகேடுகளை விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழு அமைத்தல் தொடர்பாக அரசு வெளியிட்ட அரசாணை.

**ஆதாரம்:**

1. அரசாணை எண்: 174, நாள்: 15.12.2021.
2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடித எண்: 35084/ஆர் 3/2021, நாள்: 21.09.2021.

8. பதிவுத்துறையில் திங்கட்கிழமை தோறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுதல் வேண்டும் என்று அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. அரசாணை எண்: 118, நாள்: 29.09.2021.
2. பதிவுத்துறை தலைவரின் கடித எண்: 33912/ஆர் 3/2021, நாள்: 14.09.2021.

9. பதிவு சட்டப்பிரிவு 32 (ஏ) இன் கீழ் போலி ஆவணங்களை தடுப்பதற்காக கிரைய ஆவணத்தை எழுதிக் கொடுப்பவர் மற்றும் எழுதி வாங்குபவர் புகைப்படம் மற்றும் இடது பெருவிரல் கைரேகை கட்டாயமாக்கப்பட்டதோடு இதர வகை ஆவணங்கள் அடைமானம், குத்தகை, ஏற்பாடு, தானம், உயில் மற்றும் அதிகார ஆவணம் முதலியவனவற்றிற்கும் தாக்கல் செய்பவரின் புகைப்படம் மற்றும் கைரேகை பதிவிடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பது பற்றி பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்: 22154/சி1/2006, நாள்: 28.06.2006, 29.06.2006.

10. பதிவுச் சட்டம் பிரிவு 2(1) மற்றும் பதிவு விதி 82(1)&(2) இன் கீழ் ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபரை அடையாளம் காட்டும் சாட்சிய நபர்களின் பெயர், தந்தை பெயர், மற்றும் முகவரி அடங்கிய அடையாள அட்டையை பதிவு ஆவணத்தில் கட்டாயம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கை தெளிவாக காட்டுகிறது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்: 44377/சி1/2016, நாள்: 08.12.2016.

11. தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிமம் விதிகள் 1982 விதி 2(டி) கீழ் ஆவண எழுத்தர் சொத்தில் உரிமை குறித்து விசாரணை செய்து எழுத வேண்டும் மற்றும் உரிம விதி 31 இன் படி ஆவணத்தை தயாரித்த ஆவண எழுத்தர் ஆவணத்தின் இறுதி பக்கத்தில் அவருடைய பெயர் உரிமை எண்ணை கட்டாயம் குறிப்பிடபட வேண்டும் இந்த முறை வழக்கறிஞருக்கும் பொருந்தும். ஆவண எழுத்தர் முழு விவரத்தை பதிவு செய்தால் தான் பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்: 41530/யு1/2017, நாள்: 08.11.2017 இல் தெரிவிக்கப்பட்டுள்ள படி பதிவு சட்டம் பிரிவு 68(2) இன் கீழ் விசாரணை செய்து போலி ஆவணம் என முடிவு செய்யும்போது அதனை எழுதிய ஆவண எழுத்தரை அடையாளம் கண்டு குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறைக்கு புகார் அளிக்க ஏதுவாக இருக்கும் என்று பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கையை குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கை எண்: 24129/சி1/2021, நாள்: 04.08.2021.

12. ஆவண பதிவின் போது சார்பதிவாளர்கள் நேரடியாக ஆவணதாரர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டும், இந்நிகழ்வின் போது இடைத்தரகர்கள் தலையீட்டினை தவிர்த்திட அனைத்து நிலை பணியாளர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர், மேலும் அலுவலகத்தில் வெளிப்படை தன்மையை உறுதி செய்யவும் அறிவுறுத்தப்படுகின்றனர், பதிவு அலுவலர்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை தவிர்த்து வேறு எந்த தொகையினையும் வசூல் செய்வது தெரிய வந்தால் உரிய ஒழுங்கு நடவடி எடுக்கப்படும். பொதுமக்கள் எவ்வித தடையயும் இன்றி சேவைபெறும் நிலையை உருவாக்க வேண்டும் என்று பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 17772/ஜீ3/2021, நாள்: 11.05.2021.

13. உட்பிரிவு செய்ய தேவை இல்லாத ஆவண பதிவுகளில் தானாக பட்டா மாற்றம் நடைமுறைப்படுத்த அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. அரசாணை எண் 84, நாள்: 04.02.2020.

2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 56154/சி1/2018, நாள்: 25.05.2018.

3. பதிவுத்துறை தலைவர் அலுவலக மேல் வரைவு எண்: 1852/சிஎஸ்1/2013, நாள்: 06.01.2021.

4. ஆணையர் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் நேர்முக கடித எண்: கே8/30417/2019, நாள்: 03.02.2021.

5. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 12446/சி1/2019, நாள்: 08.02.2021.

6. ஆணையர் நில அளவை மற்றும் நிலவரித் திட்டம் நேர்முக கடித எண்: கே8/30417/2019, நாள்: 02.03.2021.

7. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 12446/சி1/2019, நாள்: 03.03.2021.

14. ஆவண பதிவின் போது 10 நாட்களுக்குள் பெறப்பட்ட வில்லங்கச் சான்றுடன் ஆவணங்களை தாக்கல் செய்ய கட்டாயமாக்கப்பட்டுள்ளது அவ்வாறு செய்யப்படாத ஆவணங்களில் பதிவு அலுவலர் வில்லங்கச் சான்று போர்வை செய்ய வேண்டி வலியுறுத்த வேண்டும் என்று பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையிலும் உயர்நீதிமன்ற தீர்ப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 18223/சி1/2013-3, நாள்: 08.11.2013.

2. உயர்நீதிமன்ற வழக்கு எண்:நி.ஊ. ஹிநு: 674/2020, நாள்: 28.09.2020.

3. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 24011/சி1/2020, நாள்: 08.10.2020.

15. ஆவணப்பதிவின்போது ஆவணதாரர்களின் கைப்பேசி எண்ணை கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று பத்திர பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 2806/சி/2013, நாள்: 30.01.2013.

2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 55969/சிஎஸ்1/2013-1, நாள்: 23.01.2018.

3. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 20470/சி1/2020, நாள்: 20.08.2020.

16. ஆவணப்பதிவிற்கு ஆட்சபனை தெரிவித்து தடை மனு அளிப்பது தொடர்பாகவும் அதனை விசாரணை செய்வது தொடர்பாகவும் ஆதாரம் இல்லாத பட்சத்தில் தடை மனைவி நிராகரித்தல் தொடர்பாகவும் பத்திர பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையிலும் செய்தி வெளியீட்டிலும் தெள்ளத் தெளிவாக வெளியிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை க.எண்: 55580/சி1/2004, நாள்: 09.03.2005.

2. பதிவுத்துறை தலைவர் அவர்கள் சுற்றறிக்கை எண்: 33/சி1/2010, நாள்: 15.09.2010.

பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்: 39708/சி1/2018, நாள்: 04.10.2018.

17. சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவண எழுத்தர்கள் மற்றும் நிலத்தரகர்களை அனுமதிக்க கூடாது எனவும் ஆவண எழுத்தர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் ஆவண எழுத்தர்கள் மீது புகார்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால் ஆவண எழுத்தர்கள் ஆவணம் தயாரிப்பதற்கான கட்டண ரசீது கட்டாயம் வழங்கப்பட வேண்டும் என்றும் ஆவண எழுத்தர்கள் ரசீது புத்தகம் கட்டாயம் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் பதிவுத் துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதாரம்:**

1. பதிவுத்துறை தலைவர் ஆணை எண்: 61349/இ1/06, நாள்: 18.12.2006.

2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடித எண்: 58779/இ1/09, நாள்: 18.11.2009.

3. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 25-2/எஸ்2/2010, நாள்: 21.06.2010.

4. பதிவு துறை தலைவர் அவர்களின் ஆணை எண்: 61492/எஸ்1/10, நாள்: 19.11.2010.

5. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 50584/எஸ்1/2013, நாள்: 09.12.2013.

6. பதிவுத்துறை தலைவர் அவர்களின் சுற்றறிக்கை எண்: 7513/எஸ்1/2020, நாள்: 25.1.1020.

18. போலி ஆவண பதிவை தடுக்கும் வகையில் ஆவண பதிவின் போது சமர்ப்பிக்கப்படும் முந்தைய ஆவணத்தின் முதல் பக்கத்தில் கையெழுத்துட்டு அதனை பதிவு ஆவணத்தில் கோர்வை செய்ய வேண்டும் என்று அனைத்து சார் பதிவாளர்களுக்கும் பதிவுத்துறை தலைவர் அவர்கள் அனுப்பிய சுற்றறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மீஆதாரம்:மீ

1. பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கை எண்: 25600/சி1/2018, நாள்: 07.06.2018.

2. பதிவுத்துறை தலைவர் அவர்களின் கடித எண்: 25600/சி1/2018, நாள்: 13.06.2018.

# பொதுத் தொகுதியில் தலித் வேட்பாளரா? ஆதங்கத்தில் பட்டுக்கோட்டை தொகுதி த வெ க வேட்பாளர் ஏனாதி மதனுக்கு நெருக்கடி கொடுக்கும் நிர்வாகிகள்

**தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் ஒரே நேரத்தில் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் வேட்பாளரை அறிமுகம் செய்து அதன்படி ஆரம்ப காலகட்டத்தில் இருந்து ரசிகர் மன்றம் துவங்கி தற்போது வரை சமூகப் பணியாற்றி வரும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கியுள்ளார்.**

அந்த வகையில் பட்டுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடக் கூடிய வேட்பாளராக ஏனாதி மதன் என்பவரை விஜய் அறிவித்தார். ஏனாதி கிராமத்தில் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் தான் மதன். அனைவரிடத்திலும் அன்பு பாராட்டி பழகக் கூடியவர். ஆரம்ப காலகட்டத்தில் ரசிகர் மன்றம் துவங்கியதில் இருந்தே விஜய் ரசிகராக தீவிரமாக செயல்பட்டு வந்த இவர் ரசிகர் மன்றத்தின் ஏனாதி கிளை ரசிகர் மன்றத்தின் பொருளாளராகவும் அதன் பின்பு பட்டுக்கோட்டை ஒன்றிய தலைவராகவும் தொடர்ந்து தஞ்சை தெற்கு மாவட்ட ரசிகர் மன்ற தலைவராக இருந்து திறம்பட பணியாற்றினார். ரசிகர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை தானே முன்வந்து அரசு மருத்துவமனைக்கு வரும் ஏழை நோயாளிகளுக்கு ரத்த தானம் செய்தும் தன்னால் முடிந்த உதவிகளை ஏழை மக்களுக்கு செய்தும் பட்டுக்கோட்டை தொகுதி மட்டுமல்லாமல் தஞ்சை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளாக கருதப்படும் அதிராம்பட்டினம் மதுக்கூர் பேராவூரணி சேது பாவா சத்திரம் பெருமகளூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் உள்ள மக்களிடம் நன்கு அறிமுகமானவர். இதன் காரணமாகவே ரசிகர் மன்றம் தமிழக வெற்றி கழகம் என கட்சியாக உருவெடுத்த நிலையில் கட்சித் தலைமை இவருக்கு மாவட்ட செயலாளர் பொறுப்பு வழங்கி அதன்படி கட்சி தொண்டர்கள் இடத்தில் நல்ல பேரை தக்கவைத்து உள்ளார். தனக்கு தான் சீட் கிடைக்கும் என்று எண்ணி இருந்த தமிழக வெற்றி கழக மாவட்ட நிர்வாகிகள் பலர் ஏனாதி மதனுக்கு தலைமை சீட் அறிவித்ததும் அவர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.இதன் காரணமாக இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத அவர்கள் எப்படியாவது ஏனாதி மதனை மாற்றிவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு ஏனாதி மதன் மீது பல்வேறு அவதூறுகளை சமூக வலைதளங்களில் பரப்பி வந்தனர். மேலும் இவரை மாற்ற வேண்டும் என கட்சித் தலைமைக்கு பல புகார்களை அனுப்பியும் வைத்தனர். இதற்குக் காரணம் ஏனாதி மதன் தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதுதான். இருந்தும் ஏனாதி மதனின் செயல்பாடுகள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்த கட்சி தலைமை ஏனாதி மதனின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அரசியல் உள்நோக்கம் கொண்டது என்பதை அறிந்து அவரை மாற்றவோ அல்லது அவர் மீது நடவடிக்கை எடுக்கவோ இல்லை. இந்த நிலையில் ஏனாதி மதன் தன் மீது சமூக வலைதளங்களில் பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி அவதூறு பரப்பும் வகையில் செயல்படும் நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பட்டுக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். இவ்வளவு இடையூறுகளுக்கு இடையில் தற்போது தொடர்ந்து தேர்தல் பணியாற்றி வரும் இவருக்கு தொகுதியில் நல்ல செல்வாக்கு உள்ளது. தனித்தொகுதியில் ஒரு பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர் போட்டியிடுவதா என்ற வக்கிர புத்தியினால் ஏனாதி மதன் மீது சுமத்தப்பட்டு வரும் வீண் பழிகளை நம்பாத அனைத்து சமுதாய கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் மதனுக்கு தீவிரமான ஆதரவு கொடுத்து கிராமம் தோறும் சென்று பொதுமக்களிடம் வாக்குகள் சேகரிக்கும் பணியை இரவு பகல் பாராது செய்து வருகின்றனர் .இது ஏனாதி மதனுக்கு ஒரு நல்ல ஆறுதலாகவே இருந்து வருகிறது என்று ஏனாதி மதனின் நெருக்கமான நண்பர்கள் தெரிவிக்கின்றனர்.



# விருகம்பாக்கம் பகுதியில் ஸ்பாவில் பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய வழக்கில் தலைமறைவு எதிரி கைது.1 ஐபோன் பறிமுதல்.

சென்னை பெருநகர காவல், R-5 விருகம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர் கடந்த 18.09.2025 அன்று மதியம், சென்னை, விருகம்பாக்கம், நடேசன் நகர், காளியம்மன் கோயில் தெருவில் உள்ள ஒரு ஸ்பாவை கண்காணித்தபோது, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடப்பது உறுதி செய்யப்பட்டது.

அதன்பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட காவல் குழுவினர் மேற்படி ஸ்பாவிற்குள் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய ஸ்பா உரிமையாளர் 1.T.சரவணன் வ/41, ஸ்பா மேலாளர் 2.S.சரவணன்,வ/36, 3.கிஷோர்குமார், வ/25 ஆகிய மூவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து 2 செல்போன்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும், மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த தங்க வைத்திருந்த 3 பெண்கள் மீட்கப்பட்டு பெண்கள் அரசு மகளிர் காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை தேடி வந்த நிலையில், R-5 விருகம்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்கண்ட வழக்கில் தலைமறைவாக இருந்த மேற்படி ஸ்பாவின் மற்றொரு உரிமையாளர் ராமச்சந்திரன், வ/38, கொரட்டூர், சென்னை என்பவரை (03.04.2026) அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து 1 ஐபோன் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணைக்குப்பின்னர் கைதுசெய்யப்பட்ட எதிரி ராமச்சந்திரன் (03.04.2026) அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.



Ramachandran-
R-5 p.s.accused.

# SP அலுவலகத்தில் வேலை – என போலியான செய்தியை பரப்பி பண மோசடியில் ஈடுபட்ட நபரை கைது செய்த தென்காசி மாவட்ட காவல்துறையினர்

சமீபத்தில் தென்காசி வட்டார பகுதிகளில் உள்ள வாட்ஸ் அப் குழுவில் தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் தட்டச்சு பணிக்கு பெண்கள் மட்டும் உடனடி தேவை தகவலுக்கு செல்போன் எண்ணில் அணுகவும் என்று போலியான செய்தியை பரப்பி வேலை வாங்கி தருவதாக கூறி பண மோசடி செய்து வருவதாக கிடைத்த தகவலின் பேரில் தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.A. மயில்வாகனன் I.P.S., அவர்கள் உத்தரவின் பேரில் சைபர் கிரைம் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜீலியஸ் சீசர் அவர்களின் தலைமையில், காவல் ஆய்வாளர் திருமதி.வசந்தி மற்றும் சைபர் குற்றப்பிரிவு காவலர்கள் விசாரணை மேற்கொண்டு நிரந்தர வேலை வாய்ப்பு தருவதாக ஆசை வார்த்தை கூறி மோசடியில் ஈடுபட்ட கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தாலுகா, ஐயர்பாடியை சேர்ந்த லாசர் என்பவரின் மகன் சார்லஸ் விஜயகுமார் (வயது 31) என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர். இணையதளத்திலும், வாட்ஸ் ஆப் குழுவிலும் இதுபோன்ற பரவி வரும் போலி வேலைவாய்ப்பு செய்திகளை நம்பி பொதுமக்கள் பணத்தை இழந்து விட வேண்டாம் எனவும் இதுபோன்ற வேலைவாய்ப்பு மோசடி குறித்து உடனடியாக காவல் துறையினருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.



Owned, Published And Printed By **R.SIVAKUMAR** Printed At **CHENNAI OFFSET PRINTERS**, 19/1, 21/2, Kitabathkhan Bhandur Street, Ellis Road, Chennai - 600002. Published From No.14/88, 3rd Main Road, Venkateswara Nagar, Velachery, Chennai - 600042 Editor: **R.SIVAKUMAR**


SS AQUA
TECHNOLOGIES
SWIMMING POOL, JACUZZI & STEAM,
FOUNTAINS, LANDSCAPING & IRRIGATION
The pool gives good vibes
+ 91 96264 34377
www.ssaquatechnologies.com


SODEX
Liquid Laundry Detergent
SODEX
Floor Cleaner
SODEX
Toilet Cleaner
Active Formula
5 in 1
SODEX
DISHWASH LIQUID
SODEX
Fabric Softener
SODEX
Clean & Care.
Manufactured & Marketed By:
ECOGUARD LABS
Plot # 14, Rojambal Nagar Kanna puram, Mugaglivakkam Chennai 600125
Contact: 95000 76229 / 95000 76411
பொருளோ தரம்
வீட்டிற்க்கோ சுகாதாரம்!!


A Journey of 15 Years
Geesys in India
Safe - Save - Sustain
GEESYS®
Voltage Problemaa?
Ungal veetla TV, Fridge, AC off aagudhaa?
GEESYS
Solution Ready!
GEESYS Voltage Stabilizer
unga veetukku full protection!
Fast voltage correction
Appliances safety guaranteed
Energy efficient & durable
“Switch to GEESYS Now!”
Follow us
Call Us
9962012354
Mail Us
Info@geesysindia.com
Learn more
www.geesysindia.com